
ஸினிமாத் தொழிலில்
இதற்கு முன்பு சாதித்ததை விட
அரிய சாதனைகளை
அமோகமாக விளக்கும்...
ஜூபிடரின்
வேலைக்காரி
பல சாகசச் செயல்களும்
தெவிட்டாத ஹாஸ்யமும்
வியப்பு மிகுந்த கதையும்
கொண்ட அருமையான
சமூகச் சித்திரம்
டைரக்ஷன்
ஏ.எஸ்.ஏ.சாமி
ஸ்டூடியோ
சென்ட்ரல்
JUPITER PICTURES CIRCUIT

உங்கள் அறிவிற்கும் திறமைக்கும் ஏற்ற பயிற்சி.
ஓய்வு நேரத்திற்கு சிறந்த பொழுது போக்கு.

குறைந்த செலவில் நல்ல வருமானம்

இந்தியா, பாகிஸ்தான், இலங்கையிலுள்ள ஆண் பெண் சிறுவர் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.

போட்டி, வெற்றி சுலபம்

I. 12000
II. 6000

25,000*

III. 4000
IV. 3000

1	16	3	14
12	7	10	5
13	2	15	4
8	9	6	11

போட்டி — A

2 முதல் 17 வரையிலுள்ள எண்களை இந்தக் கட்டத்தில் மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், மூலைக்கு மூலையும் எப்படிக் கூட்டினாலும் 38 வரும்படி அமைக்கவும். ஒரு எண்ணை ஒரு தடவைதான் உபயோகிக்கலாம்.

மதராஸ் ரிலயன்ஸ் பாங்கில் சீல் செய்து டிபாஸிட்டில் வைத்திருக்கும் விடைக்கு எண்ணுக்கு எண், கட்டத்திற்கு கட்டம் சரியான விடைக்கு முதற் பரிசும், முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு 2-ம் பரிசும், முதல் வரிசை மட்டும் சரியான விடைக்கு மூன்றும் பரிசும், முதல் இரண்டு எண்கள் சரியாக இருந்தால் நான்காம் பரிசும் அளிக்கப்படும். வசூலாகும் மொத்தத் தொகையிலிருந்து செலவு போக மிகுதித் தொகையை *1, 2, 3, 4,* பரிசுதாரர்களுக்கு முறையே ***12000 : 6000 : 4000 : 3000*** (மொத்தம் ***25000****) விகிதாசாரப்படி பகிர்ந்து அளிக்கப்படும். ஆகவே வசூல் அதிகமானால் *பரிசுத் தொகையும் அதிகமாகும் ஆதலால் தயவு செய்து உங்கள் நண்பர்களையும் சேரும்படி சொல்லவும்.

பாங்கில் வைத்துள்ள விடைக்கு சரியாயிருக்கும் உங்கள் விடை ஒவ்வொன்றுக்கும் பரிசு கொடுக்கப்படும். ஆதலால் எத்தனை விடைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். சாதாரண காகிதத்தில் விடைகளை தயார் செய்யவும். பரிசு ஜாபிதாவுக்காக உங்கள் விலாஸம் எழுதிய கவர் ஒன்றை வைத்து அனுப்பவும்.

பிரவேசக் கட்டணம்: ஒரு விடைக்கு அணா 0-12-0. 3 விடைக்கு ரூ. 2-0-0 மாத்திரம்.

கட்டணத்தை மணியார்டர் மூலம் அனுப்பவும்.

உங்கள் விடைகளை *14—4—49* உக்குள்

தபாலில் போடவும்

மதராஸ் ரிலயன்ஸ் பாங்கில் சீல் செய்து டிபாஸிட்டில் வைத்திருக்கும் சரியான விடையின் நகல் ஒவ்வொரு போட்டிதாரருக்கும் ***18-4-49*** தபால் மூலம் அனுப்பப்படும். பரிசு ஜாபிதா ***23-4-49*** அனுப்பப்படும். எல்லா விஷயங்களுக்கும் எங்கள் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். மற்ற விதிகள் வழக்கம் போல்.

லக் & கோ., Firm No. 1564 (Govt. Regd
43/23, நல்வரன் தெரு, **மாம்பலம், மதராஸ். 17.**

இந்த ஊசியில்

பட்டை-2. ஊசி - 6.

மார்ச் 1949

1	தூஷணைப் பிரசாரம் ...	தலையங்கம்	5
2	உள்ளது உள்ளபடி ...	ஜடாயு	6
3	அஞ்சலி தேவி	வாழ்க்கை வர்ணனை	10
4	அஞ்சலி தேவி ...	ஆர்ட் படம்	17
5	எம். எஸ். சரோஜினி ...	மூவர்ணப் படம்	18
9	திரைக்குப்பின்	வி. எஸ். வெங்கடேசன்	19
7	குண்டூசியைக் கேளுங்கள்	பதில்கள்	22
8	செய்திப் படங்கள் ...	படங்கள்	31
9	புஸ்தகப் பொழு[illegible]	புஸ்தக விமர்சனம்	45
10	கல்வி ம[illegible]பதேசம்	செ[illegible]தி	46
11	பொதுஜனம் பேசுகிறார்	கடிதங்கள்	47
12	மஹாலிங்கம் ...	[illegible]வர்ணப் படம்	51
13	லைலா மஜ்னு ...	ஆர்ட் படம்	52
14	துனிப்புல் ...	வெட்டுக்கிளி	53
15	விநோதினி ...	திரைக் கதை	56
16	இது செய்தி ...	செய்திகள்	59
17	சென்னையில் இரு நல்ல நாடகங்கள்	நாடக விமர்சனம்	63
18	பிரம்மலோகம்	ஸ்டுடியோச் செய்திகள்	66
19	குண்டூசி டைரி ...	தினக் குறிப்பு	68

ஆப்ரேஷன் இல்லை பத்தியமில்லை

உத்திரவாதத்துடன் சுகப்படுத்தப்படும்

மூலம், பவுத்திரம், எத்தனை முளைகள், எத்தனை துவாரங்கள், சீழ், ரத்தம் வந்து கொண்டிருந்தாலும் கவலை வேண்டாம். நேரில் வந்து வைத்தியம் செய்துகொள்ள வேண்டும். பெண்களுக்கு பெண்களைக் கொண்டே சிகிச்சை செய்யப்படும் ஏராளமான நற்சாட்சி பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசு பெற்றவர்

கந்தன் மூலபவுத்திர ஆஸ்பத்திரி

137, தங்கசாலைத் தெரு, சௌகார்பேட்டை, சென்னை-1.

134114

சந்தா விபரம்

	இந்தியா	இலங்கை	வெளிநாடு
ஒரு வருஷ சந்தா :	ரூபாய் 6.	ரூபாய் 6.	ரூபாய் 9.
தனிப் பிரதி	அணா 8.	சதம் 50.	அணா 12.

விளம்பர விகிதங்கள்

ஒரு தடவைக்கு

அட்டை விளம்பரங்கள்		சாதாரண விளம்பரங்கள்	
முன் பக்கம்	... ரூ. 450	ஒரு பக்கம்	... ரூ. 75
கடைசிப் பக்கம்	... ரூ. 250	அரைப் பக்கம்	... ரூ. 40
2 (அ) 3-ம் பக்கம்	... ரூ. 150	$\frac{1}{3}$ பக்கம்	... ரூ. 30
		கால் பக்கம்	... ரூ. 25

மற்ற விபரங்களுக்கு எழுதவும் :

மானேஜர், "குண்டூசி" காரியாலயம்,

25, கிடங்குத் தெரு, :: :: சென்னை—1.

பட்டை 2

ஊசி 6

குண்டூசி

ஆசிரியர் பி.ஆர்.எஸ்.கோபால்

மார்ச்சு

1949

தூஷணைப் படங்கள்

அமெரிக்காவிலிருந்து ஒரு பரபரப்பளிக்கும் செய்தி நமக்கு எட்டுகிறது. அதைக் கீழே தருகிறேன்:—

"நியூயார்க் நகரத்தின் நடு மத்தியில் டைம்ஸ்ஸ்கொயரில் உள்ள 'ரியேரல்டா' தியேட்டரில் 'இந்தியா பேசுகிறது' என்ற அமெரிக்கப் படம் காண்பிக்கப் பட்டது. இந்தப் படம், இந்தியா பற்றிய தூஷணைப்படம் என்றும், இதனால் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள உறவு குலைந்து விடுமென்றும், ஆதலால், இப் படத்தைக் காட்டக் கூடாது என்றும் சென்ற மாதம் 25-ந் தேதி நியூயார்க்கிலுள்ள இந்திய மாணவர்கள் இத்தியேட்டர் முன் மறியல் செய்தார்கள்.

"சென்னை மாகாணத்தைச் சேர்ந்த மிஸஸ் சகுந்தலா ஜகன்னாதனும், மரியம் மேத்யூவும் தியேட்டருக்கு வெளியில் துண்டுப் பிரசுரங்களை வினியோகித்தனர். புத்தபிரான்முன் நிர்வாணமான சில வெள்ளை மாதர் தங்களை 'அர்ப்பணம்' செய்து கொள்ளுவதாக பெரிய படங்கள் எழுதி வைக்கப் பட்டிருக்கின்றன."

இந்தச் செய்தியைப் படித்த பின்னர் ஒவ்வொரு இந்தியரின் ரத்தமும் கொதிக்கும் என்பது நிச்சயம். மேனாட்டினர்-அதிலும் அமெரிக்கர்கள் பல வருஷ காலமாக சினிமாப் படங்கள் மூலமும் புஸ்தகங்கள் மூலமாகவும் இந்தியாவைப் பற்றி இடை விடாது தூஷணைப் பிரசாரம் செய்து வந்திருக்கின்றனர். முன்பு நம்மை ஆண்டு வந்த பிரிட்டிஷ்காரர்களுக்கு இது சாதகமாயிருந்ததால் அவர்கள் இப் பிரசாரத்தை ஒழிக்க முற்படவில்லை. இந்தியாவில் நடந்த கிளர்ச்சிகளெல்லாம் பலனளிக்காமற் போயின. ஒரு வேளை, அவர்களின் தூண்டுதலின் பேரிலேயே இப்பிரசாரம் நடந்ததோ என்று கூட நமக்குச் சந்தேகம் ஏற்பட்டதுண்டு.

ஆனால், இனி சுதந்திர இந்தியா இத்தகைய பிரசாரங்களுக்கு இம்மியும் இடம் அளிக்கக் கூடாது. இதைத் தடுப்பதற்கான தீவிர நடவடிக்கைகளை இந்திய சர்க்கார் உடனே எடுத்துக் கொண்டு, தூஷணையிலிறங்கும் நாடுகளுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

உள்ளது உள்ளபடி

சினிமாப் படங்கள் சம்பந்தமான பத்திரிகைக் காட்சிகள் நடத்தப்படும் அலங்கோலத்தையும், அதை நடத்துபவர்களின் போக்கையும் பற்றி எழுத வேண்டுமென்பது என் வெகு நாளைய அவா. சென்ற சில மாதங்களில் நடத்தப்பட்ட பத்திரிகைக் காட்சிகளில் நிகழ்ந்த பல விரும்பத்தகாத சம்பவங்களே இதை எழுதத் தூண்டுகிறது.

எதற்காக இக் காட்சிகள்?

சினிமாப் படங்களுக்குப் பத்திரிகைக் காட்சி நடத்தும் வழக்கத்தை எந்த "மஹான்" ஆரம்பித்தாரோ தெரியவில்லை. ஆனால் அந்த வழக்கம் என்னவோ சினிமாப் பட ஆரம்ப காலம் முதல் அநேக பட முதலாளிகளால் பின் பற்றப்பட்டு வருகிறது. இக் காட்சிகள் எதற்காக நடத்தப்படுகின்றன? இந்தக் கேள்விக்கு இவற்றை நடத்தும் பட முதலாளிகளில் பெரும் பாலோருக்கே தெரியாது!

அவர்கள் இக் காட்சிகளை நடத்தும் விதத்திலிருந்து நாம் சில விஷயமாய் யூகித்துக் கொள்ளலாம். 'வழக்கம்' என்பதற்காகச் சிலர் இக் காட்சிகளை நடத்துகிறார்கள். "பத்திரிகை விமர்சனங்களுக்குப் பயந்து பதுங்குவதாக பொது ஜனங்கள் நினைத்து விடக் கூடாது" என்பதற்காக சிலர் நடத்துகிறார்கள். வேறு சிலரோ இந்தத் தொல்லைகளை யெல்லாம் இ[illegible]த்து விட்டுக் கொள்ளாமல் சும்மா இருந்து விடுவர். சொற்பப் பேர்களே, 'தம் படம் நிச்சயம் பத்திரிகைகளின் பாராட்டுதலைப் பெறும்' என்ற தன்னம்பிக்கையுடன் இக் காட்சிகளை நடத்துகிறார்கள்.

ஏமாற்றம் ஒழியுமா?

முதலாவதாக, "பத்திரிகைக் காட்சி", "வர்த்தகக் காட்சி", "முன் தரிசனக் காட்சி", "ஆரம்பக் காட்சி" இவைகளுக்குள்ள தாரதம்மியம் எத்தனை பட முதலாளிக்குத் தெரியும் என்பதே சந்தேகம். "வர்த்தகக் காட்சி" என்பார்கள். அதில் வர்த்தகம் சம்பந்தப்படாதவர்களாய் நிரப்பி யிருப்பார்கள். "பத்திரிகைக் காட்சி" என்பார்கள்; அதிலோ தியேட்டர் காவலாளியின் குடும்பம் முதல், அப் படத்தில் சம்பந்தப்பட்ட (சம்பந்தப்படாத!) வர்களின் குடும்பமும் நண்பர்களும், அழைப்பின்றியே பல்லைக் காட்டிக்கொண்டு உள்ளே நுழைந்த "அத்தான் அம்மாஞ்சி"களும் ஏராளமாய் இருப்பர். அழைப்பின்பேரில் பிறகு வரும் பத்திரிகாசிரியர்களுக்கும், பிரமுகர்களுக்கும் உள்ளே இடமிராது.

சில முதலாளிகள் இவ் விஷயத்தில் சிக்கன முறையைக் கடைப் பிடிப்பதுமுண்டு. படத்தின் ஆரம்பக் காட்சிக்கே பத்திரிகாசிரியர்களுக்கு அழைப்பனுப்பி, தம் "கடனை" காமா சோமா வென்று தீர்த்து விடுவர். இப்படிச் செய்கிறார்களே; அழைப்பு அனுப்பப்பட்டவர்களுக்கு இடத்தை 'ரிஸர்வ்' செய்து வைத்திருப்பரா? இருக்காது. பொது ஜனங்களையும் டிக்கெட் மீது அனுமதித்திருப்பர். அதிருஷ்டம் இருந்தால்தான் ஆசிரியர்களுக்கு இடம் கிடைக்கும்!

ஜடாயு

இது மாதிரி சந்தர்ப்பங்களில் படத்தின் முதலாளியும், சிப்பந்திகளும் என்ன செய்வதென்று தோன்றாமல் கையைப் பிசைந்துகொண்டு, தலை மயிர் பறக்க, அங்கு மிங்கும் ஓடித் தவிப்பார்கள். இந்த அலங் கோலத்தைச் சிறிது நேரம் பார்த்து விட்டு சில பத்திரிகாசிரியர்கள் ஓசைப் படா

மல் வீட்டுக்குத் திரும்பி விடுவதும் உண்டு. ஏமாற்றம் அடைந்த பத்திரிகாசிரியர்களுக்காக சில படங்களின் "இரண்டாம் பத்திரிகைக் காட்சி" களும் நடத்தப் பட்டிருக்கின்றன. இது போன்ற சம்பவங்கள் சமீப காலத்தில் அடிக்கடி நிகழ்வதால், சில சூடு பட்ட பத்திரிகாசிரியர்கள் அழைப்புக் கிடைத்த போதிலும் ஆஜராவதில்லை.

அர்த்தமற்ற அழைப்பு

இரண்டாவதாக, இவர்கள் தாங்கள் என்ன விதமாய் அழைக்கிறோம் என்பதைக் கவனிப்பதே இல்லை. "கோஷ்டியுடன் வருக" என்று அழைப்பில் குறிப்பிடப் பட்டிருக்கும். ஆனால் இதை நம்பி கூட எவரையாவது அழைத்துக்கொண்டு போனால் அவமானம் தான். அழைப்புப் பெற்றவருக்கு இடம் கிடைத்தாலல்லவோ, அழைத்துச் செல்லப் பட்ட வருக்கு இடம் கிடைப்பதற்கு? அழைப்புக் கடிதத்தில், "இதை உடன் எடுத்து வருக" என்று குறிப்பிட்டிருக்க மாட்டார்கள். ஆனால், அழைப்புக் கடிதம் கையில் இல்லாதவர்களை முன் கேட்டிலுள்ள "தற்குறி" தடுத்து நிறுத்தி விடுவான்.

'செய்வதை ஒழுங்காகச் செய்ய வேண்டும்' என்ற விருப்பம் உடைய சில படமுதலாளிகள், "உங்கள் இடம் ரிஸர்வ் செய்யப்பட்டிருக்கிறது" என்று அழைப்புத்தாளில் குறிப்பிட்டு விட்டு, கூட ஒரு நம்பருள்ள டிக்கட்டையும் வைத்திருப்பார்கள். 'ஏற்பாடு பிரமாதமாய் இருக்கும்' என்று எண்ணிக் கொண்டு போனால் அங்கும் பழைய கதையாகவே இருக்கும். அப்படமுதலாளியின் சூரத்தனமெல்லாம் அழைப்பு அனுப்பியதோடு தீர்ந்து போய் விட்டதென்பதைத் தெரிந்து கொண்டு திரும்பவேண்டியிருக்கும்.

அழைப்பு அனுப்புவதில் இன்னும் எவ்வளவோ அலங்கோலங்கள் உண்டு. திங்கட்கிழமை காலையில் காட்சியை வைத்துக் கொண்டு ஞாயிற்றுக் கிழமை (பூட்டப்பட்ட) காரியாலயங்களுக்கு அழைப்புகள் போய்ச் சேரும்படி அனுப்பப்படும். காட்சி ஆரம்பமாவதற்கு அரை மணி நேரத்திற்கு முன் கிடைக்கும்படி சிலர் அனுப்பி வைப்பதுமுண்டு வேறு சிலர் டெலிபோனில் அழைப்பதும் உண்டு. இப்படி ஏற்பாடு செய்த காட்சிகளை பண்டிகை நாட்களிலும், கொண்டாட்ட தினங்களிலும் வைத்துக் கொண்டு கழுத்தை அறுப்பார்கள். இதனாலெல்லாம் தான் சில பத்திரிகைக் காட்சிகளை சொற்பப் பேர்களுடன் நடத்தவேண்டியதாகி விடுகிறது.

புதிய விலாஸம்

குண்டூசி காரியாலயம்

25, கிடங்குத் தெரு,

சென்னை 1

டெலிபோன் :

4316

ஏன் பின்பற்றக் கூடாது?

ஜெமினி, வாஹினி போன்ற சில முற்போக்குப் படத்தயாரிப்பாளர்கள் மேலே சொன்னது போன்ற தாறுமாறுகள் எதுவுமின்றி, பத்திரிகைக் காட்சி நடத்துவதை ஒரு தனிக் கலையாக (மேனாட்டு தோரணையில்) செய்து வருகிறார்கள். இவர்கள் நடத்திய காட்சிகளில் அழைப்புத் தாள் உள்ள எவரும் இடமில்லாமல் தவிக்க நேரிட்டதில்லை. தியேட்டருள் 1000 பேர்களுக்கு இடம் இருந்தால் 999 பேர்க

ளுக்குத் தானே அழைப்பு அனுப்புகிறார்கள் (பாக்கி உள்ள ஒரு இடம் அழைப்புகளை விநியோகிப்பவருக்கு!) அப்படியிருக்க ஏமாற்றத்திற்கு ஏது சந்தர்ப்பம்?

ஆகவே பிறரைக் கௌரவிக்கத் தெரிந்து கொண்டிருக்கும் அவர்கள் பதிலுக்கு நன்கு கௌரவிக்கப் படுவதில் ஆச்சரியமென்ன? இவர்களை ஏன் இதர படமுதலாளிகளும் பின்பற்றக் கூடாது?

பத்திரிகைக் காட்சிகளை நடத்துவதோ நடத்தாமலிருப்பதோ படமுதலாளிகளின் சொந்த உரிமை. ஆனால் நடத்த புறப்பட்டால் ஒழுங்காக நடத்த வேண்டும் என்று வற்புறுத்த வேண்டியது பத்திரிகாசிரியர்களின் உரிமை. திறமையில்லாத முதலாளிகள் பத்திரிகைக் காட்சிகளை நடத்தாமலிருப்பதே மேல். 'ஆசிரியர்கள் படம் பார்ப்பதற்கு உதவ வேண்டும்' என்ற 'தர்ம சிந்தனை' அவர்களுக்கு வேண்டியதில்லை. ஆசிரியர்கள் கௌரவத்தை இழப்பதற்குப் பதில் (சந்தோஷத்துடன்) காசு கொடுத்துப் பார்த்துக் கொள்ளுவார்கள். அதற்குச் சக்தியில்லாதவர்கள் சும்மாயிருக்கட்டும்.

அங்கும் அதேதான்

சினிமாக் காரர்களைப் பின்பற்றி நாடகக்காரர்களும் தங்கள் நாடகங்களுக்கு பத்திரிகாசிரியர்களை அழைக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வசதியிருந்தும் அவர்கள் தனியாக பத்திரிகைக் காட்சிகளை நடத்துவதில்லை. அவர்களும் கூட தம் [illegible]காதரர்களைப் போலவே ஆசிரியர்களைத் தவிக்கச் செய்வதில் ஆனந்தம் கொள்ளுகின்றனர். ஒன்பதரை மணி ஆட்டத்திற்கு ஆசிரியர்களை வரவழைத்து அவர்களை வீட்டிற்குப் போக முடியாமல் தவிக்கச் செய்கிறார்கள். வசதியுள்ள நிரந்தரக் கம்பெனியார்கள் ஏன் தனிப் பத்திரிகைக் காட்சிகளை நடத்தக்கூடாது?

பொன் குவிக்கும் டைரெக்டர்

டைரெக்டர் எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடுவை பொன் குவிக்கும் டைரெக்டர் என்று கூறுவது மிகையாகாது. அவரால் தயாரிக்கப் பட்ட ஆர்யமாலா, ஜெகதலப்ரதாபன், சிவகவி, கன்னிகா ஆகிய படங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொற்குவியலை அளித்துள்ளது. இந்தப் படங்கள் பத்தாவது தடவையாகவும், பதினைந்தாவது தடவையாகவும் காட்டப்படும் போதுகூட "க்யூ"வில் நின்று டிக்கெட் கிடைக்காமல ரஸிகர்கள் வீடு திரும்புவதை பார்த்திருக்கிறோம்.

இதற்குக் காரணம், ஸ்ரீ. நாயுடு சினிமா ரஸிகர்களின் மனோபீஷ்டத்தை நன்கு உணர்ந்து, ஜன ரஞ்சகமான படங்களைத் தயாரித்து வருவது தான். அவரது படங்தள ஏதுமே சோடையாகப் போனதில்லை.

ஆகவே, ஸ்ரீ. நாயுடு 'பவளக் கொடி படத்தைத் தயாரிக்கப் போகிறார் என்ற செய்தியே ரஸிகர்களின் மனதில் ஆவலைக் கிளப்பி விட்டது. இப் படத்தில் பிரபல நடிகர்களான மஹாலிங்கமும், ராஜகுமாரியும் முதன் முதலாய் சேர்ந்து நடிக்கிறார்கள் என்பதும், பக்ஷி ராஜா நக்ஷத்திரமான எம். எஸ். சரோஜினி "கன்னிகா" மூலம் புகழ் பெற்ற டி. ஈ. வரதன், கிருஷ்ணன், மதுரம், லலிதா-பத்மினி ஆகியோர் இதில் நடிப்பதும், இந்த ஆவலை மேலும் தூண்டுகிறது.

ஆனால் ரஸிகர்கள் அதிக நாள் காத்திருக்க வேண்டியதில்லை. ஏப்ரல் மாத மத்தியில் இப் படத்தை தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில் ஏக காலத்தில் வெளியிட, இப் படத்தின் விநியோகஸ்தர்களான நாராயணன் கம்பெனியார் ஏற்பாடு செய்து வருகின்றனர். பக்ஷி ராஜாவின் முந்தின படங்கள் எல்லாவற்றையும் விடவும் பவளக்கொடி சிறந்து விளங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

உடனே எழுதுங்கள்!

சொற்ப பிரதிகளே உள்ளன

நக்ஷத்திர மாலை

2

"குண்டூசி" எழுதியது

★

எம். கே. டி. பாகவதர், கிருஷ்ணன்-மதுரம், ஹொன்னப்ப பாகவதர், பி. எஸ். கோவிந்தன், காமெடியன் சாரங்கபாணி, எம். கே. ராதா, எம். வி. ராஜம்மா, குமாரி ருக்மணி, வஸந்த கோகிலம், தனலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி போன்ற

21 சினிமா நக்ஷத்திரங்களின்
வாழ்க்கை வர்ணனையும்
அழகிய ஆர்ட் படங்களும்
அடங்கியது

விலை ரூ. 2. தபாற் சிலவு அணா 6

"குண்டூசி" காரியாலயம்,

25, கிடங்குத் தெரு, சென்னை 1.

முகில்.

விஜயதசமி தினம் இருக்கிறதே; அது ஹிந்துக்களால் மிகப் புனிதமாய்க் கருதப்படும் நாள். அன்றைய தினம் விடுமுறை நாளாயிருந்த போதிலும் உபாத்தியாயர்கள் தம் பள்ளிக்கூடங்களைத் திறந்து வைத்திருப்பார்கள். அன்றைய தினம் பாடம் ஒப்பிக்க வேண்டிய சிரமம் இராததால் பிள்ளைகள் தாமாகவே பள்ளிக்கூடத்திற்கு வருவார்கள். இதெல்லாம் எதற்காக? உபாத்தியாயர்கள் அன்று தம் பள்ளிக்கூடத்தில் புதிதாய் அக்ஷராப்யாசம் செய்துகொள்ள வரும் பிள்ளைகளுக்குப் பாடத்தை ஆரம்பித்து வைப்பதற்கும், பிள்ளைகள் தின்பண்டங்களை வாங்கிக் கொள்ளுவதற்குமாகத்தான்!

விஜயதசமி தினத்தன்று நாட்டியம், சங்கீதம் முதலிய கலா சிக்ஷைகளின் ஆரம்பமும், அரங்கேற்றல்களும், திறப்பு விழாக்களும் நடக்கும். நம் பட முதலாளிகள்கூட அன்றைய தினம் ஒன்று படத்தின் ஷூட்டிங்கை ஆரம்பிப்பார்கள்; அல்லது படத்தின் ஆரம்ப விழாவைக் கொண்டாடுவார்கள். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் கலை, தொழில் ஆரம்பத்திற்கு

அஞ்சலி தேவி

"கிண்டுஜி"

ஏற்ற நாள் விஜயதசமி ஆகும். இத்தகைய ஒரு சுப தினத்தில் பிறக்கும் ஒரு குழந்தை கலையில் அதுவும் லளித கலைகளில் திறமை மிகுந்ததாய் இருக்கும் என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா? அஞ்சலி தேவி ஒரு விஜயதசமி தினத்தன்றுதான் பிறந்தார் என்பதை அறிந்தீர்களானால், இது போல் கொஞ்சமும் தயக்கமில்லாமல் சொல்லத் தொடங்கி விடுவீர்கள்.



அஞ்சலி தேவி விசாகப்பட்டணம் ஜில்லாவிலுள்ள பெத்தாபுரம் என்ற ஊரில் 1927-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் பிறந்தார். அவரது தகப்பனாரான நூக்கய்யா அந்த ஊரில் ஒரு சாதாரண மிராசுதாரராய் இருந்தார். அவருக்குப் பிறந்த நான்கு பெண்களிலும், ஒரு ஆணிலும் முதன்மையானவரே அஞ்சலி தேவி.

அஞ்சலி சிறு குழந்தையாய் இருந்தபோதே அக் குடும்பம் காக்கினாடாவுக்குச் சென்று குடியேறி விட்டது. அஞ்சலி பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். அவர் மூன்றாவது பாரம் வரையில் பள்ளியில் படித்தார். பள்ளிக்கூடத்தில் படித்து வந்தபோதே அஞ்சலி தேவி (தம் ஒன்பதாவது வயதில்) பள்ளிக்கூட நாடகங்களில் பங்கெடுத்துக் கொள்ளுவாராம். இதைக் கண்டு அவரது தகப்பனார் மிக சந்தோஷிப்பது வழக்கமாம்.

பள்ளிப் படிப்பை அஞ்சலி மூன்றாவது பாரத்துடனேயே நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. படிப்பு முடிந்ததும் அவரது சித்தை நாட்டியத்தை நாடியது. ஒரு குருவிடம் அக்கரையுடன் சில காலம் கற்றுக் கொண்டார். பிறகு அவர் ஒரு நடன கோஷ்டியைச் சேர்த்துக் கொண்டு

ஆந்திர தேசத்தில் பல ஊர்களுக்குச் சென்று நாட்டியம் ஆடிவிட்டுப் புகழுடன் திரும்பினார். யுத்த நிதிக்காகவும், செஞ்சிலுவை நிதிக்காகவும் அவர் பல தடவை நாட்டியம் ஆடியிருக்கிறார்.

அவரது ஆட்டத்தை ஜனங்கள் மிகவும் ரஸிக்கத் தொடங்கினர். அப்படி மிகவும் ரஸித்தவர்களில் ஒருவர் தான் ஸ்ரீ. ஆதிநாராயண ராவ் என்பவர். அவர் அச் சமயம் காக்கிநாடாவில் இருந்த "வாலிபர் பொழுது போக்குச் சங்கம்" என்ற சபையில் நாடக டைரெக்டராக இருந்துவந்தார். அவருக்குப் பாடத் தெரியும் என்பதோடு பாட்டு இயற்றவும், வசனங்கள் எழுதவும் கூடத் தெரியுமாம். அவர் பல நாடகங்களைத் தாமே தயாரித்து, நடிகர்களைப் பழக்கி, இந்த சபையின் சார்பாக மேடைமீது பிரபலப் படுத்தி வந்தார். அஞ்சலி தேவியின் நாட்டியத்தை காக்கிநாடா வாசிகள் ரஸித்தார்கள் என்ற விஷயத்தை அவர் அறிந்ததும் அவரைத் தம் நாடகங்களில் நடிப்பதற்கு ஏற்பாடு செய்தார். இந்த நாடகங்களில் பங்கெடுத்துக் கொள்ளத் தொடங்கியதும் அஞ்சலி அதிகப் புகழை அடையத் தொடங்கினார்.

நாடகம் சம்பந்தமாக அஞ்சலிக்கும் ஆதிநாராயண ராவுக்கும் ஏற்பட்ட பரிச்சியம் காதலாக மாறியது. நாடகத்தில் மட்டுமல்ல, வீட்டிலும் அஞ்சலியின் "டைரெக்டராக" மாறினார் ஆதிநாராயணா! இருவருக்கும் 1942-ம் வருஷத்தில் "சட்ட விவாஹம்" நடந்தேறியது. இப்பொழுது அவர்களுக்கு இரு ஆண் குழந்தைகள் உள்ளனர். மூத்தவனான

சின்னாராவுக்கு ஆறு வயதும், இளையவனான நளின் நிரஞ்சன் ராவுக்கு மூன்று வயதும் ஆகிறது.

காக்கினாடாவில் நடித்த நாடகங்களுக்குள்ளேயே அஞ்சலிக்கு அதிகப் பெயரைச் சம்பாதித்துக் கொடுத்தவை "தெருப் பாடகன்", "லோபி" ஆகிய இரு நாடகங்களும் ஆகும். அவரது பெயரைச் சினிமா உலகிற்குத் தெரியும்படிச் செய்ததும் இந்த நாடகங்கள்தாம்.

1945ம் வருஷத்தில் பிரபல ஆந்திர டைரெக்டரான ஸி. புல்லய்யா கொல்லபாமா படத்தை டைரெக்ட் செய்வதற்காக ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அவர் டாக்கி ஆரம்ப காலம் முதல் இன்று வரை பல புதிய நடிக நடிகைகளை சினிமா உலகிற்கு இழுத்து வந்து அவர்களை நக்ஷத்திரங்களாக்கி வைத்திருக்கிறார் என்பது நேயர்களுக்குத் தெரிந்த விஷயமே. அந்த "ராசிக் கை" மூலம் நக்ஷத்திரமானவர்களில் அஞ்சலியும் ஒருவராவார்.

புல்லய்யாவும், ஆதிநாராயணராவும் வெகு நாளைய நண்பர்கள். ஆதலால் புல்லய்யாவை, தம் மனைவி நடித்து வந்த "தெருப் பாடகன்" நாடகத்திற்கு அழைத்து வந்தார் ஆதிநாராயணா. நாடகத்தைப் பார்த்ததும் அஞ்சலியின் நாட்டியத்தையும், நடிப்பையும் மிக வியந்தார் புல்லய்யா. தாம் அப்பொழுது தயாரிக்கத் திட்டம் போட்டிருந்த கொல்லபாமா தெலுங்குப் படத்தில் அஞ்சலியை 'மோஹினி'யாக நடிக்கச் செய்ய விரும்புவதாக ஆதிநாராயணாவிடம் அவர் கூறினார்.

அஞ்சலிக்கு வெகு நாளாக சினிமா நக்ஷத்திரம் ஆக வேண்டும் என்ற எண்ணம் உண்டு. ஆனால், அந்த பாக்கியம் நமக்கெங்கே வாய்க்கப் போகிறது என்று எண்ணிக் கொண்டிருந்தார். ஆகவே அந்த பாக்கியம் அவரை அழைக்கவே அவர் மிக சந்தோஷத்துடன் புல்லய்யாவின் யோசனைக் கிணங்கி, சென்னைக்குப் புறப்பட்டு வந்தார். அது முதல் சினிமா உலகம் அவரைக் கெட்டியாய்ப் பற்றிக் கொண்டுவிட்டது.

அஞ்சலிக்கு அழகிய அங்க அவையவங்களும், குறுகுறுப்பான கண்க

ளும், சினிமாவுக் கேற்ற முகவெட்டும் பொருந்தியிருக்கின்றன. அத்தோடு கூட அவருக்கு நாட்டியத்திலும், நடிப்பிலும் நல்ல அனுபவம் ஏற்பட்டிருப்பதால், அவருடைய முதல் படமான கொல்லபாமாவிலேயே அவாது நடிப்பு எல்லோரது கவனத்தையும் கவரும் வகையில் சிறப்பாக அமைந்து விட்டது. இந்த "மோஹினி" படம் சினிமா ரஸிகாகள் தம் மனதைப் பறிகொடுத்தனர்.

கொல்லபாமா ஆந்திர தேசத்தில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் ஒரு பரபரப்பை உண்டு பண்ணியது. ஆதலால் அவருக்கு தெலுங்குப் படங்களில் நடிக்க மட்டுமன்றி தமிழ்ப் படங்களில் நடிப்பதற்கும் மிகுந்த கிராக்கி ஏற்பட்டது. அவரது இரண்டாவது படமான மதாலஸாவில் நடிக்க ஆரம்பித்த சமயத்திலேயே மஹாத்மா உதங்கர் படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டார். எனினும் உதங்கரில் அவருக்கு அதிக சந்தர்ப்பம் அளிக்கப் படவில்லை. அவர் வெறுமனே நாட்டியம் மட்டுமே ஆடியிருக்கிறார்.

கொல்லபாமா படம் மிகப் பிராபல்யம் அடைந்ததின் விளைவாக பாக்யா பிக்சர்ஸார் இதே கதையை மங்கையர்கரசி என்ற படமாய்த் தயாரிக்கத் தீர்மானித்தனர். இப் படத்திலும் அஞ்சலி தேவி நடித்திருக்கிறார். விரைவில் இப் படம் திரைக்கு வரவிருக்கிறது.

இந்த சமயத்தில் அஞ்சலி தேவி நடிக்க ஆரம்பித்த சிவகெங்கா, மாயாரம்பா ஆகிய இரு தெலுங்குப் படங்களும் பாதியளவிலேயே நின்று விட்டன. ஆனால் அதற்கடுத்தாற் போல் அவர் நடித்த பாலராஜு தெலுங்குப் படம் ஆந்திர தேசத்தில் பிரமாதமான வசூலை அளித்தது.

அஞ்சலி தேவிக்கு சினிமா ரஸிகர்களின் ஆதரவு அதிகரித்து வருவதைக் கவனித்து வந்த டைரெக்டர் டி. ஆர். சுந்தரம் அவரைத் தம் ஆதித்தன்

கனவில் நடிக்கச் செய்தார். இப் படத்தின் மூலம் அஞ்சலிக்கு தமிழ்ப் படவுலகில் கிராக்கி அதிகரித்து வரு கிறது. மாடர்ன் தியேட்டர்ஸார் தயா ரிக்கப் போகும் மாயாவதியிலும், பி. புல்லய்யா தயாரிக்கப் போகும் தூக்குத் தூக்கியிலும், ஜூபிடர் பிக்சர்ஸார் தயாரித்து வரும் கன்னி யின் காதலியிலும் நடிப்பதற்கு அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

அஞ்சலி நடித்துள்ள கீலு குர்ரம் (மாயக் குதிரை) தெலுங்குப் படம் ஆந்திர தேசத்தில் ஏராளமான வசூலை அளித்து வருகிறது. ஆதலால் இதே படத்தில் தமிழ் சம்பாஷணை களைச் சேர்த்துத் தமிழ்ப் படமாக வெளியிட அதன் முதலாளிகள் முயன்று வருகின்றனர்.

இப்பொழுது அஞ்சலி ஸவப்பன சுந்தரி, பல்லுட்டூரி பில்லா (கிரா மப் பெண்), டைரெக்டர் ஆர். பத்ம நாபனது ரக்ஷ ரேகா ஆகிய மூன்று தெலுங்குப் படங்களில் நடித்து வரு கிருர். இப்பொழுது அவர் நடித்துக்கொண்டிருக்கும் அரைடஜன் படங்கள் அவருக்கு இன்னமும் அதிகப் புகழை அளிக்கும் என்று எதிர் பார்க்கிறேன்.

நடுத்தர உயரமும், சிவந்த மேனி யும் உடைய அஞ்சலிதேவியின் சொந் தப் பெயர் அஞ்சம்மா என்பதாகும்.

அஞ்சலி தேவிக்கு ஆடத் தெரியும் என்பதை நேயர்கள் பல படங்கள் மூலம் தெரிந்து கொண்டிருக்கின் றனர். "ஆதித்தன் கனவில் பாடிக்கூட இருக்கிருரே?" என்று நீங்கள் கேட்கலாம். ஆனல் அப் படத்தில் அஞ்சலி பாடவில்லை; அவர் வாய் மூலம் நீங்கள் கேட்பது குமாரி ரத்தினத்தின் குரல் ஆகும்.

அஞ்சலிக்கு ஹிந்தி, தெலுங்கு, தமிழ் (கொஞ்சம்) ஆங்கிலம் ஆகிய பாஷைகள் தெரியும். அவருக்கு நன் ருக சமையல் செய்யத் தெரியுமாம். நக்ஷத்திரம் ஆகிவிட்ட இப்பொழுது கூட அவர் அவகாசம் கிடைக்கும் போதெல்லாம் சமையலறைக்குப் போய்விடுவாராம்! "அவரது சமை யல் எப்படி?" என்று என்னிடம் அபிப்பிராயம் கேட்கிறீர்களா? ஒரு நாளைக்குச் சாப்பிட்டுப் பார்த்தபின் சொல்லுகிறேன்!

....சிறுகதை

திரைக்குப்பின்

வி.எஸ்.வெங்கடேசன்...

“ஹூம்! நாழியாகிவிடப் போகிறது. கிளம்புங்கள். பாவம், அவள் காத்துக் கொண்டிருப்பாள்!”

“யார் காத்துக் கொண்டிருப்பாள்?”

“அவள்தான் உங்கள் உள்ளக் காதலி, அலங்கார சுந்தரி, அழகுத் தெய்வம்...”

“போதுமே உன்னுடைய வர்ணனை! எல்லோருமாகச் சேர்ந்து இரண்டு நாள் மஹாபலிபுரம் போய், அங்குள்ள சித்திரங்களைப் பார்த்து வரலாம் என்று அவள் என்னைக் கூப்பிட்டாள். நானும் வருகிறேன் என்றேன், இதை வைத்துக் கொண்டு அவளை ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்?” என்று சொல்லிக் கொண்டே சோபாவின் மீதிருந்த கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டான் பிரேம் குமார்.

“அவள் வேண்டுமானால் போகட்டுமே, உங்களை ஏன் அவள் கூப்பிட்டாள்? அதில் தானே மர்மம் இருக்கிறது” என்றாள் வசுமதி, சற்று கடுமையாகவும் கேலியாகவும்.

“இதோ பார் வசு; வீணாக எதற்கெடுத்தாலும் சந்தேகப்படாதே. நான் வருகிறேன் என்று சொன்னதினாலேயே இப்பொழுது போகிறேன். நான் இல்லாமலே அவள் போய் வருவாள். அவளுக்குத் துணைக்கு ஆள் இல்லையென்றோ மஹாபலிபுரம் அவளுக்குத் தெரியாதென்றோ என்னை அவள் கூப்பிடவில்லை. எனக்குச் சித்திரம், சிற்பம் என்றால் ஆசை. அத்துடன் ‘தனக்குச் சரிசமானமான நடிகன்’ என்ற காரணத்தாலேயே என்னையும் தன்னுடன் வரும்படி அழைத்தாள்.”

“அவள் அழைத்தாளாம் இவர் உடனே அதற்குச் சம்மதித்தாராம். இதை யார் நம்புவது?”

“உனக்கு என்மீது நம்பிக்கையே இல்லை. நான் எது செய்தாலும் உனக்கு சந்தேகமாய்த்தான் இருக்கிறது.”

“ஏன் இருக்காது? நீங்கள் நடந்து கொள்ளும் விதம் அப்படி. அதைவிட வேறு என்ன ருஜு வேண்டும்?...ஹூம் உங்களைச் சொல்லி என்ன பிரயோசனம். நான் இப்படி அவதிப்பட வேண்டும் என்றிருக்கிறது.”

“என்ன அவதிப்படுகிறாய், கொஞ்சம் சொல்லேன், பார்க்கலாம்?”

“அதை நான் வாய் விட்டு சொல்லவும் வேண்டுமோ? கொஞ்சம் நீங்களே சிந்தித்துப் பாருங்கள், தெரியும்.”

“எனக்குச் சிந்தித்துப் பார்க்க நேரமில்லை. உன்னால் சொல்ல முடிந்தால் சொல்லு. இல்லாவிட்டால் பேசாமல் வழியை விடு” என்றான் சற்றுக் கடுமையாக பிரேம் குமார்.

“நான் இவ்வளவு கஷ்டப்படுவதற்கு காரணம், நீங்கள் சினிமாவில் நடிப்பதற்கு நான் ஒப்புக் கொண்டதுதான்.”

“ஒருக்காலும் இல்லை. நான் பி. ஏ., படிப்பை முடித்துவிட்டு வேலைக்காக அலைந்த சமயம் எனக்கு ஒரு குமாஸ்தா வேலை கூடக் கிடைக்கவில்லை.

நான் சோற்றிற்குத் திண்டாடியது போதாதென்று உன்னையும் பல நாட்கள் பட்டினி போட்டேன். கடைசியாக அந்தக் கலியாணம் வந்தானே நான் பிழைத்தேனே! அவன் என்னைச் சினிமாவில் நடிக்க ஏற்பாடு செய்திராவிட்டால் இன்று நீ தான் வைர நகைகளுடன் ஜ்வலிக்க முடியுமா? இந்த பங்களா தான் நமக்குச் சொந்தமாக இருக்குமா? மோட்டாரில் தான் சொகுஸாய் போய் வர முடியுமா? கொஞ்சம் யோசனை செய்து பார்."

"அதுதான் தெரிந்து இருக்கிறதே! எந்த சினிமா என் குடும்பததின் வறுமையைப் போக்கிற்றோ, அதேதான் என் வாழக்கையை நாசமாக்கி வருகிறது."

"என்ன, உன் வாழ்க்கையை நாசம் ஆக்கி வருகிறதா?"

"சந்தேகமென்ன? முதல் படத்தில் உங்களுடன் நடித்த வனஜகுமாரியிலிருந்துதான் இது ஆரம்பம். அவள் நடபு உங்களுககு ஏற்பட்டதுமே என் வாழக்கையும் பாழாக ஆரம்பித்து விடடது."

"நீயாக எதையாவது கற்பனை செய்து கொள்கிறாய். உண்மையில் நான் அவளுடன் வித்தியாசமாகப் பழகியதே இல்லை. அவள் ஒரு சிறந்த நடிகை என்பதனாலேயே அவளுடன் சகஜமாய் பழகி வந்தேன்."

"சரி அது போகட்டும். அந்த பூமாவுடன் நீங்கள் சுற்றி அலைந்ததோ?"

"பூமாவைப் பற்றிப் பேசாதே. அவள் மாதிரி ஒரு பெண கிடைப்பதே அபூர்வம். ஏதோ வயிற்றிற்கில்லை என்று அவள் சினமாவில் நடிக்க வந்தாளே தவிர நடத்தையைப் பற்றி துளிக்கூட அப் பழுக்குச் சொல்ல முடியாது.'

"ஓஹோ! அப்படியானால் அவர்களைப் போலவே தானே இந்த மைதலியும்?" என்றாள், ஏதோ வெற்றி கண்டவளைப் போல வசுமதி.

"மைதலி இவர்களையும் விட மேலானவள். அவள் குணம், நடத்தை யாருக்கு வரும்? பெரிய பணக்கார குடும்பததைச் சேர்ந்த அவள் நடிக்க வநததெல்லாம் இந்தக் கலை ஆர்வத்தால்தான்" என்று சொல்லி நிமிர்ந்து உட்கார்ந்தான் பிரேம் குமார். அவன் செய்கை மைதலியின் புகழைப்பேசினாள்கூட கர்வமடையச் செய்து விடுமோ என்றிருந்தது.

"கலைக்கோ, மண்ணாங்கட்டிக்கோ—எனக்குத் தெரியாது. அதை அவள் உங்களை மயக்கி விட்டாள் என்பது மாத்திரம் எனக்கு நிச்சயமாகத் தெரியும். இல்லாவிட்டால் அவள் ஏதோ சொன்னாள் என்பதற்காக இப்படி அதிகாலையிலேயே எழுந்து புறப்படுவீர்களா?"

"நான்தான் முதலிலேயே சொன்னேனே. அவள் கூப்பிட்டாள். நானும் வருவதாக ஒப்புக் கொண்டுவிட்டேன். நான் என் பேச்சைத் தட்ட மாட்டேன். சொன்னபடி நான் போய்த்தான் திர

வேண்டும்." என்று கூறி சோபாவிலிருந்து எழுந்தான். கைக் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு நேரமாகி விட்டது என்பதற்கு அறிகுறியாக முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

"நீங்கள் இன்று போகக் கூடாது" என்றாள் வசுமதி, நிதானமாக.

அவள் சொல்லைக் கேட்டதும் பிரேம் குமார் சிறிது கோபம் அடைந்தான்.



அதற்கு அடையாளமாக சிவந்த அவன் மேனி ரத்தம் போல் மாறியது. ஒரு முறை வசுமதியை முறைத்துப் பார்த்தான். பிறகு, "என்ன வசு! நீ வரவர அசடாகி வருகிறாயே. நான் போகாவிட்டால் அவள் தவறாக நினைத்துக் கொண்டு விடுவான்" என்று கூறினான்

"இதோ பாருங்கள்! என் மீது உங்களுக்கு உண்மையாக அன்பிருக்குமானால் இன்று நீங்கள் போகவே கூடாது" என்றாள் வசுமதி.

"இது என்ன தர்ம சங்கடம், வசு! உன் மீது எனக்கு அன்பில்லையா? ஏன் இப்படி பேசுகிறாய்? வாக்குப்படி நான் போக வேண்டும் என்று தானே சொல்கிறேன். வீணாகத் தடை செய்யாதே."

(தொடர்ச்சி 39-ம் பக்கத்தில்)



அ. கோ. சாமி நாயுடு (கோலாலம்பூர்)

பேபி சரோஜா இனி சினிமாப் படங்களில் நடிப்பாரா என்பதைத் தெரிவிக்கவும்.

இப்பொழுது "குமாரி" என்றழைக்கப்பட வேண்டிய சரோஜா இனி சினிமாவில் நடிப்பார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

சினிமா பிரியன் (திருச்சி)

மூபாரக் பில்ஹறு படத்தில் புதிதாக சில காட்சிகளைத் தயாரித்துச் சேர்த்து வெளியிடப் போகிறார்களா?

அப்படி ஒரு யோசனை இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் அந்த யோசனை இப்பொழுது கைவிடப்பட்டதாய் அறிகிறேன்.

பி. கோவிந்த நாயர் (பம்பாய்)

எனக்கு விவாஹம் நடைபெறப் போகிறது. அச்சமயம் நாட்டியம் ஆட குமாரி ருக்மணியை ஏற்பாடு செய்ய முடியுமா?

இப்பொழுது ஒய். வி. ராவின் "தட்டு வாங்க"த்தில் ருக்மணி அவரது "அறையில்" ஆடி வருகிறார். உம் கலியாண தினத்திற்குள் இதெல்லாம் "அம்பலத்"திற்கு வருமெனத் தோன்றவில்லை!

ரா. குஞ்சிதபாதம் (கோலகங்சார்)

ஆ. த. அபூர்வ சிந்தாமணியில் நடித்த எஸ். வரலக்ஷ்மி கோலாலம்பூரில் பிறந்து, வளர்ந்து, கல்வி பயின்றதாகவும், 1945 ம் வருஷத்தில் இந்தியாவுக்குச் சென்று சினிமாப் படங்களில் நடிக்க ஆரம்பித்தார் என்றும் இங்கு ஒரு நண்பர் கூறுகிறார். இது உண்மையா?

உண்மையல்ல. இந்த வரலக்ஷ்மி சென்ற பத்து வருஷ காலமாக இந்தியாவிலேயே இருந்து கொண்டு பல படங்களில் நடித்து வருகிறார்.

வி. என். விஸ்வநாதன் (வீஷ்ணம்பேட்டை)

டி. ஆர். மஹாலிங்கத்திற்கு விவாஹம் ஆகி விட்டதா? குழந்தைகள் உண்டா?

அவருக்கு சில வருஷங்களுக்கு முன்பே விவாஹம் ஆகிவிட்டது. ஒரு ஆண் குழந்தையும் அவரை "அப்பா" என்றழைத்து வருகிறது.

எஸ். பாலகிருஷ்ணன் (கும்பகோணம்)

ஆதித்தன் கனவு கதை அரபியக் கதையைத் தழுவி எழுதப்பட்டதா?

அப்படித்தான் தெரிகிறது.

எம். இ. கலிபுல்லா (திண்டுக்கல்)

எம். வி. ராஜம்மா எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? தாய் பாஷை எது?

லிங்காயத் ஜாதியைச் சேர்ந்த எம். வி. ராஜம்மாவின் தாய் பாஷை கன்னடம் ஆகும்.

எஸ். முருகன் (நாகர்கோவில்)

கிருஷ்ண பக்தியில் பி. யு. சின்னப்பா தணியை மூடிக் கொண்டு

ஒரே சமயத்தில் ஒரு குடம் பாலைக் குடிப்பது நம்பக் கூடியதா?

ஏன் நம்பக் கூடாது? அவருக்கு அதற்கான வயிறு இல்லை என்கிறீரா!

டி. வி. டி. பொன்னையா
(மணச்சநல்லூர்)

இணை பிரியாமல் இருந்து வந்த காளி என். ரத்னமும், ஸி. டி. ராஜகாந்தமும் ஏன் பிரிந்து விட்டார்கள்?

அதைப் பற்றி நமக்கென்னய்யா? அவர்கள் இனி பிரியாமல் நடிப்பார்களா என்பதை மட்டும் கவனியும்.

டி. ரங்கநாதன் (நந்தி துர்க்கம்)

மாதுரிதேவி எந்த மதத்தைச் சேர்ந்தவர்? அவரது சொந்தப் பெயரும் அதுதானா?

அவருடைய சொந்தப் பெயர் 'கிளாரா'. அவர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்.

எஸ். சம்பத் (ஜார்ஜ் டௌன்)

வேதாள உலகத்தில் நடிக்கும் கே. சாரங்கபாணிக்கு உள்ள தொந்தி இயற்கையா? செயற்கையா?

இப்படிக் கேள்வி கேட்டதற்குப் பதில், அவர் முன் ஒரு பெரிய தட்டில் தின்பண்டங்களை வைத்திருந்தால் தீர்மானமான பதில் கிடைத்திருக்குமே!

சத்தியபாமா (ஓலவக்கோடு)

பல நேயர்கள் நக்ஷத்திரங்களை தங்களுக்கு மணம் செய்து வைக்கும்படி கேட்கிறார்களே? நீர் இதற்கு முன் எந்த நண்பருக்காவது இந்த விஷயத்தில் உபகாரம் செய்திருக்கிறீரா?

உபகாரமா? என் விரோதிக்குக் கூட இது போன்ற அபகாரத்தைச் செய்திருப்பேனே என்று சந்தேகிப்பது தவறு!

சுந்திரராஜுலு
(திருத்துறைப்பூண்டி)

பானுமதி வட தேசத்தைச் சேர்ந்தவரா?

ஏன், அவர் பேசும் தமிழ் ஹிந்தி மாதிரி ஒலிக்கிறதோ!

ஆர். எஸ். மஹாதேவன்
(ஆலப்புழை)

கன்னிமாடத்தில் காவலிலிருந்த மோஹினியை மோஹன் குமார் எடுத்துச் சென்றபின், அந்த பெயரில்லாத நாட்டின் பெயரில்லாத மன்னன்தன் மகளைக் கண்டு பிடிப்பதற்கு ஏன் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை?

அவன் சும்மா இருந்து விட்டதற்காக நீர் என்னைச் சும்மா விடமாட்டேன் என்கிறீரே! நான் பதில் தெரியாமல் அல்லவோ விழிக்க வேண்டி இருக்கிறது!

பொள்ளாச்சி டாக்டர் ராமமூர்த்தியின் குமாரி கமலா அநேக இடங்களில் அழகாக ஆடி வருகிறாள். சமீபத்தில் ஈரோடில் நடக்கப் போகும் கண்காட்சியிலும் குமாரி கமலா நடனம் ஆடப் போகிறாள்.

இ. பி. கே. மாடசாமி (அடச்சாணி)

நளனைப் போல் சமையல் செய்வதில் நான் கை தேர்ந்தவன். புஷ்பவல்லி தன் வீட்டில் என்னை சமையல்காரனாய் அமர்த்திக் கொள்ளுவாரா?

அவர் மட்டும் அப்படிச் செய்தாரானால் 'சனியனை' சம்பளத்திற்கு அமர்த்திக் கொண்டது போலல்லவோ ஆகிவிடும்!

ஆர். செங்கல்வராய ஆச்சாரி (சித்தூர்)

உங்கள் ஆண்டு மலரை இவ்வளவு குறைந்த விலையில் சிறந்த முறையில் வெளியிட்டீர்களே? உங்களுக்கு இதனால் லாபமா? அல்லது நஷ்டமா? எனின், எவ்வளவு?

லாபம் தான்; ரூ. 13-12-0. பண விஷயத்தில் சொற்ப லாபமே ஏற்பட்டதென்றாலும் "குண்டூசி" பிரசுரங்கள் குறைந்த விலையில் சிறந்த மதிப்புள்ளவையாயிருக்கும்" என்ற நல்லெண்ணத்தை இந்த மலர் உண்டுபண்ணி விருப்பதையே நான் பெருத்த லாபமாய் கருதுகிறேன்.

"நல்ல தம்பி"யில் ஏழைகளின் அன்பராய் நடிக்கும் என். எஸ். கிருஷ்ணன் செருப்பு தானம் செய்கிறார்.

துரைசாமி (சென்னை)

வானத்திலுள்ள நக்ஷத்திரங்களுக்கும் சினிமா நக்ஷத்திரங்களுக்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா?

உண்டு. வான நக்ஷத்திரங்கள் மின்னி மறைவதைப் போல சினிமா நக்ஷத்திரங்களும் மின்னி மறைகின்றன. வான நக்ஷத்திரங்கள் நக்ஷத்திரங்களாகவே தோன்றுகின்றன; ஆனால் சினிமா நக்ஷத்திரங்களோ படங்களில் தோன்றிய பின்னரே நக்ஷத்திரங்களாகின்றன. வான நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கத் தொடங்கியதும் நெக்லஸ் வாங்குவதில்லை; மோட்டார் வாங்குவதில்லை; வீடு கட்டுவதில்லை; ஏன் படங்களைத் தயாரிப்பது கூட இல்லை. ஆனால் சினிமா நக்ஷத்திரங்கள் இவற்றையெல்லாம் தவறாமல் செய்து வருகிறார்கள்.

எச். வி. கோவிந்தசாமி (ஹாஸன்)

படங்களில் நடிகைகள் தங்கள் காதலருக்காக உயிர்த் தியாகம் செய்வதாக நடிக்கிறார்களே, அதுபோல அவர்கள் வாழ்க்கையிலும் செய்கிறார்களா?

இல்லை. அவர்களில் அநேகர் முதலில் கணவனைத் "தியாகம்" செய்து விட்டுத் தானே சினிமாவுக்கு வந்து "காதலை" ஆரம்பிக்கிறார்கள்?

வி. பானுசாமி (சென்னை)

நீங்கள் வெளியிட்டிருக்கும் "நக்ஷத்திர மாலை" புஸ்தகங்களிலுள்ள வாழ்க்கை வரலாறுகளை சில பத்திரிகைகள் காப்பியடிக்கின்றனவே? அவைகளுக்கு சுயமாக எழுதத் தெரியாதோ?

நான் இதற்காக வருந்த வில்லை. காப்பியடிக்கவாவது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறதே என்று சந்தோஷமே அடைகிறேன்.

ரஹீம் (ஆயப்பாடி)

சினிமா நக்ஷத்திரங்களின் வாழ்க்கை வரலாறுகளை படங்களா



வி. சீதாராமன்னிடம் 'ஒரு பிரின்ஸிபிள் உண்டு!' ஹாஸ்ய பாகத்தில் அவரைப் போட்டால் வெளுத்து வாங்கி விடுவார் என்பது அது. "என் கணவர்" தமிழ்ப் படத்தில் அவர் கவியாகப் பொழிந்து நம்மைச் சிரிக்க வைக்கிறுர். அவர் பக்கத்தில் இருப்பவர் (சமீபத்தில்) மேடை மீது "கற்பின் சக்தி"யை நடித்துக் காட்டிய நடிகை டி. கே. பட்டம்மாள், அவரது மனைவியாக திறம்பட நடிக்கிறுர்.

கத் தயாரித்தால் சுவாரஸ்யமாய் இருக்குமா?

சுவாரஸ்யத்துக்கு ஒன்றும் குறைவிராது. ஆனுல் பத்திரிகைகளெல்லாம் அதன் பின் பட முதலாளிகளின் வாழ்க்கை வரலாறுகளையே எழுத வேண்டியதாகி விடும்.

எம். சங்கரலிங்கம் (அருப்புக்கோட்டை)

ஹொன்னப்ப பாகவதர் தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறுர்? அவரது விலாஸத்தைத் தெரிவிக்க முடியுமா?

ஹொன்னப்பா தற்போது ஆர்கேஎஸ் பிக்சர்ஸாரின் "தேவமனேஹரி"யில் நடித்து வருகிறுர். விலாஸம்:- நெ.4, போக் ரோடு, சென்னை 17.

எஸ். எஸ். சர்மா (சுளிபுரம்)

டி. ஆர். ராமச்சந்திரன் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்?

மாத்வ பிராமண ஜாதியைச் சேர்ந்தவர் அவர்.

கே. என். செங்கோட கௌண்டர் (கோயமுத்தூர்)

பானுமதிக்கு விவாஹம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா? அவருக்கு என்ன வயதாகிறது? தற்போது எந்தப் படங்களில் நடித்து வருகிறுர்?

பானுமதிக்கு இப்பொழுது 25 வயதாகிறது. டைரெக்டர் ராம கிருஷ்ணு அவரது கணவர். அவருக்கு சுமார் மூன்று வயதுடைய புத்திரன் இருக்கிறுன். தற்போது "ரத்ன குமார்",

விரைவில் திரைக்கு வரவிருக்கும் "விடுதாதினி" தமிழ்ப் படத்தில் கதாநாயகியாக நடிக்கும் தனலக்ஷ்மி.

"தேவமனோஹரி" ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

எஸ். கந்தசாமி (கொமரபாளையம்)

டி. ஆர். மஹாலிங்கமும், பானுமதியும் புலந்திரன் என்ற தமிழ்ப் படத்தில் நடிப்பதாக விளம்பரம் செய்யப் பட்டதே? அப்படம் என்னவாயிற்று?

இது போன்ற 'கர்பச் சிதறல்' பற்றிப் புலன் (அறியும்) திறன் எனக்கில்லை, ஸ்வாமி!

இஸாக் (திருக்களாச்சேரி)

"சினிமாப் பார்ப்பதால் வாலிபர்கள் கெட்டுப் போகிறார்கள்" என்று சிலர் கூறுகிறார்களே. இதுபற்றி உம் அபிப்பிராயம் என்னவோ?

வாலிபர்கள் திரையைப் பார்ப்பதால் தான் சினிமா கெட்டுப் போகிறது என்று நான் சொல்லுகிறேன். அவர்களின் காசைக் கறப்பதற்காகத் தானே பட முதலாளிகள் நிறைய காமக் காட்சிகளைப் புகுத்துகிறார்கள்?

ஏ. அருள்ராஜ் (குத்தாலம், த. ஜி.)

நான் இதுவரையில் பார்த்துள்ள தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலப் படங்கள் மொத்தம் 900. இவற்றைப் பார்ப்பதற்காக செலவான ரூபாய் 600. பேசாமல் இப்பணத்தை உண்டியில் போட்டுக் கொண்டு வந்திருந்தால் இப்பொழுது அத் தொகைக்கு ஒரு நல்ல 'ரேடியோ ஸெட்'டை வாங்கி யிருக்கலாமல்லவா?

"ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" என்று சொல்லுவார்கள். அது போல் நீர், சினிமா பார்த்தாலும் (செலவழித்ததை) சேர்த்துப் பார்த்து விட்டீர்! ஆனால் ஒன்று; நீர், "செலவழித்த பணத்தை சினிமா உலகம் வட்டியுடன் திருப்பித் தர வேண்டும்" என்று கேட்காமலிருந்தீரே, அந்த வரைக்கும் புத்திசாலி!

வி. பாண்டுரங்க நாடார் (சென்னை)

வேதாள உலகத்தில் நடனம் ஆடும் குமாரி கமலாவுக்குத் தற்போது என்ன வயதாகிறது?

வருகிற ஜூன் மாதத்தில் அவர் தம் பதினைந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுவார்.

எம். குப்புசாமி (அம்பத்தூர்)

வன மோஹினி படத்தின் டைரெக்டர் பகவானின் விலாஸத்தைத் தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்.

அது பகவானுக்குத் தான் வெளிச்சம்!

"ராம் ரஹீம்" (கூத்தூர்)

சினிமாத் தொழிலை சர்க்காரே எடுத்துக் கொண்டு நடத்தி, மதுவிலக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சினிமாத் தொழிலில் வேலை தரப் போகிறார்களாமே? உண்மையாகவா?

இது ஆதாரமற்ற வதந்தி. அது இடக்கட்டும். சர்க்கார் இப்படிச் செய்வதாக இருந்தால், சினிமா உலகிலேயே பாதிக்கப் பட்டவர்களுக்கு எங்கே வேலை தேடிக் கொடுப்பார்களோ!

சந்திரவடிவு (தேனாம்பேட்டை)

தவமணி தேவி நடை, உடை, பேச்சு, இவைகளில் மேல் நாட்டு மோஸ்தரில் காணப்படுகிறாரே? ஏன்? அவர் ஆங்கிலோ இந்திய மாதா?

அதெல்லாம் இல்லை. தவமணிக்கு மேல் நாட்டு நடிகைகள் மாதிரி நடந்து கொள்ள வேண்டும் என்பது ஆசை. அதற்கெல்லாம் இந்தப் பாழாய்ப் போனத் தமிழ்ப் பட உலகம் இடம் அளித்தால்தானே? ஆதலால் கௌன் அணியும் விஷயத்திலாவது அந்த மேல் நாட்டு நடிகைகளைப் பின்பற்றுகிறார் போலும்!

"மெய்யப்பன்" (விருத்தாசலம்)

டி. எஸ். துரைராஜ் இப்பொழுது படங்களில் ஏன் காணப்படவில்லை?

"பிழைக்கும் வழி"யை 'பட ரஸிகர்களுக்கு வெளியிட்டுவிட்டு, அவர் இப்பொழுது "ஏழுமுடி மன்னன்" என்ற படத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்.

எஸ். எம். ஹனீபா (புதுக்கோட்டை)

ஜெமினியின் ஔவையார் எப்பொழுது வெளிவரும்?

பெரிய "சுருட்டுடன் இந்தப் 'பெரிய மனிதர்' கொளத்துமணி "விநோதினி"யில் இவ்விதம் காட்சி அளிக்கிறார்.

இப்பொழுது இப்படத்தின் ஷூட்டிங் வெகு வேகமாய் நடந்து வருகிறது. அதைப் பார்த்தால் இன்னும் இரண்டு மூன்று மாதங்களிலேயே வெளிவந்து விடும் போல் தோன்றுகிறது.

ஜே. பி. நாதன் (கோலாலம்பூர்)

வேதாள உலகத்தில் அணுகுண்டைப் பற்றி ரிஷி குறிப்பிடுகிறாரே? அந்தக் காலத்திலேயே அணுகுண்டு இருந்ததா?

அணுகுண்டைப் போட்டால் கூட தமிழ்ப்பட ரஸிகர்கள் பொறுமையாய் இருப்பார்கள் என்று ஸ்ரீ. மெய்யப்பன் தவறாக நினைத்து விட்டார்.

கே. ஷண்முகம் (மதுக்கரை)

சமீபத்தில் சென்னையில் நாட்டியம் ஆடிய ஸ்ரீமதி......வை நான் மணக்க விரும்புகிறேன்.

சரிதான்; அவரது ஆட்டத்தைப் பார்த்ததும் உம் அறிவு ஆட்டங் கண்டு, அவர்மீது நாட்டங் கொள்ள ஆரம்பித்திருக்கிறதென்பது தெரிகிறது!

ஏ. வஹாப் (கொழும்பு)

நியூடோன் ஸ்டுடியோவின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்?

கீழ்ப்பாக்கம், சென்னை—என்று சேர்த்து எழுதும்.

எஸ். வி. சர்மா (சுளிபுரம்)

புராணப் படங்களைக் 'குப்பைகள்' என்று சிலர் கூறுகிறார்களே. ஒரு சில சமூகப் படங்களைத் தவிர மற்றவையெல்லாம் வெற்றி பெறவில்லையே? இது பற்றி உம் அபிப்பிராயம் என்ன?

குப்பை மூளைகள்தாம் புராணங்களைக் குப்பை எனக் கூறும். புராணங்களில் கதை அமைப்பு மிக நன்றாய் உள்ளன. நூதனமான சில விஷயங்களைப் புகுத்துவதற்கும் அது வசதி அளிக்கிறது. சமூகப் படங்களிலோ என்றால் திரும்பத் திரும்ப தாசி வீட்டைத்தான் காட்டுகிறார்கள். புது மாதிரியான கதைகளை நம் பட முதலாளிகள் சிருஷ்டிப்பதற்காக சிரமப் படுவதில்லை. தோல்விக்கும் இதுவே காரணம்.

எஸ். கே. அப்துல் வஹாப் (திருச்சி)

நம் தமிழ்ப் படங்களில் பரமசிவன் தோன்றி கை இல்லாதவர்களுக்கு கையையும், காலில்லாதவர்களுக்கு காலையும், உயிரில்லாதவர்களுக்கு உயிரையும் கொடுக்கிறாரே? இது மாதிரிக் காட்சிகள் ஹிந்தி படங்களில் ஏன் காணப்படவில்லை?

இல்லாமலென்ன? பல படங்களில் வந்திருக்கின்றன. ஆனால் இவ்வளவு சக்தி வாய்ந்த சிவ பிரானுக்கு, நாம் தோன்றும் சில நொண்டிப் படங்களுக்குக் கால் கொடுத்து ஓடச் செய்யும் சக்தி மட்டும் இல்லை என்பது ஆச்சரியமல்லவா!

ஆர். ராஜு (மட்டகளப்பு)

சிலர் சினிமா நடிகைகளை மணந்த பின் அவர்களை நடிக்க விடாமல் தடுத்து விடுவதேன்?

கடைசியாக "ஆதித்தன் கனவி"ல் தோன்றிய எஸ். என். லக்ஷ்மி இப்பொழுது ஆர்கேயெஸ் பிக்சர்ஸின் "தேவ மனோஹரி"யில் நடிக்கிறார்.

அந்தப் பெண்மணி தம்மிடம் காட்டும் காதலில் 'நடிப்பு' கலந்து விடாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை போதும்!

* * *

திரைக் காதலுக்கும், நிஜக் காதலுக்கும் என்ன வித்தியாசம்?

திரைக் காதலில் எதிர் பார்த்த ஆபத்துக்களிலிருந்து தப்ப வேண்டியிருக்கும். ஆனால் நிஜக் காதலிலோ எதிர்பாராத ஆபத்துக்களிலிருந்து தப்ப வேண்டியிருக்கும்!

சக்லே (உதகமண்டலம்)

ஐயா, குண்டுசியாரே! உம்மைத் தண்ணீரில் போட்டால் மிதப்பீரா?

எனக்கு நீந்தத் தெரியாது. வெறுமனே தண்ணீரில் தள்ளி விட்டீரானால் பாதாளத்தைப் பார்க்கப் போய்விடுவேன். ஆனால் ஒரு துண்டு 'உறிஞ்சு தாள்' மீது படுக்க வைத்து மிதக்க விட்டீரானால் சிறிது நேரத்தில், நண்பர் 'உறிஞ்சுதாள்' அடியில் போய் விடுவார். நான் மட்டும் மிதந்து கொண்டேயிருப்பேன்!

எல். பெருமாள் ரெட்டியார் (குஜிலியப்பாறை)

டி. ஆர். ராஜகுமாரிக்கு விவாகமாகி விட்டதா? இல்லையென்றால் விவாஹம் செய்து கொள்ளும் எண்ணம் உண்டா?

ஏராளமான ரஸிகர்கள் அவரது விவாகத்தைப்பற்றிக் கவலைகொள்ள ஆரம்பித்துள்ளதினால்தான் போலும், அவர் இந்த விஷயத்தில் சிறிதும் கவலையற்று இருக்கிறார்!

எல். கே. ஸ்வாமி (விருதுநகர்)

தமிழ் சந்திரலேகாவில் நடித்த என். எஸ். கிருஷ்ணன் ஏன் ஹிந்தி சந்திரலேகாவில் நடிக்கவில்லை?

எஸ். எஸ். வாஸனின் "கடுமையான" ஒத்திகைகளுக்கு மறுபடியும் உடன்பட கிருஷ்ணன் விரும்பாதது தான் காரணம் என்று கேள்வி. எனினும் இந்த ஒரு விஷயத்திலிருந்தே கிருஷ்ணன் ஹிந்தி எதிர்ப்பு கோஷ்டியைச் சேர்ந்தவர் என்று நீர் தீர்மானித்து விட முடியாது.

கணேஷ் நாராயண் (திருச்சி)

மாயா ஜோதியில் டி. ஆர். மஹாலிங்கத்துடன் கதா நாயகியாக நடிப்பவர் டி. எஸ். ராஜலக்ஷ்மியா அல்லது ஜெய கௌரியா?

ஜெய கௌரி அல்ல; டி. எஸ். ராஜலக்ஷ்மிதான்.

தமிழ் வருஷப் பிறப்பன்று எதிர்பார்க்கப்படும் முருகன் டாக்கீஸாரின் "ரத்னகுமார்" படத்தில் மதுரம், பானுமதி

இன்பத்தம்பி (வத்தலக் குண்டு)

குண்டுசியாரே! நீர் காதலிக்காத சினிமா நக்ஷத்திரம் ஏதேனும் உண்டா?

என்ன இப்படிக் கேட்கிறீரே! நான் காதலிக்காதவர்கள் சினிமாவில் ஈடுபட்டிருக்கும் அத்தனை பெண்களும் தான். அதிலும் நான் நிச்சயமாய்க் காதலிக்காதவர்கள் கே. எஸ். அங்கமுத்துவும், பி. ஆர். மங்களமும் ஆவர்!

ஒய். கே ராமச்சந்திரன் (திருச்சி)

காமெடியன் சாரங்கபாணியின் மனைவி கே. ஆர். செல்லம் என்று சிலர் கூறுகின்றனர். இது உண்மையா?

உண்மைதான்—சில படங்களில் மட்டும்! சாரங்கபாணிக்கு மனைவியும் ஒரு புத்திரனும் உள்ளனர்.

ஏ. எஸ். ராமசாமி (பெங்களூர்)

சக்ரதாரியில் பூ விற்றுக் கொண்டு வரும் பெண் யார்? பெயர் என்ன?

"துளஸி தாஸி"ல் நீங்கள் கவனிக்கத் தவறிய "துளஸி" இவர்தான்!

எம். டி. ஜான் (ஸ்ரீவில்லிபுத்தூர்)

நான் புதிதாகக் கட்டியிருக்கும் வீட்டை எம். கே. டி. பாகவதர், சின்னப்பா, ரஞ்சன், கிருஷ்ணன் ஆகியோரின் புகைப் படங்களால் அலங்கரிக்க விரும்புகிறேன்.

இப்படங்கள் உம் விட்டுச் சுவற்றை அலங்கரிப்பது சாத்தியமோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால், சில காலத்திற்குப் பிறகு உம் விட்டுச் சுவர்களை வெந்நீர் அடுப்பின் புகைப் பட(ல)ங்கள் அலங்கரிக்கும் என்பதென்னவோ நிச்சயம்!

வி. பி. பி. சாமி (அருப்புக்கோட்டை)

மாதுரி தேவிக்கு கல்யாணம் ஆகிவிட்டதா?

ஆகிவிட்டது.

எம். எஸ். வெங்கடேசன் (காவேரிப்பட்டினம்)

கன்னிகாவில் நடிக்கும் டி. ஈ. வரதன் பாடும் பாட்டுகள் அவராலேயே பாடப்பட்டவையா? இல்லையென்றால் குரல் இரவல் கொடுத்துள்ளவர் யார்?

வரதனுக்குப் பதில் அப்படத்தில் பாடியிருப்பவர், பாபநாசம் சிவனின் சிஷ்யரான மணி என்று தெரிகிறது.

ச. ராஜாமணி (பம்பாய்)

நடனமாடும் டி. கே. பட்டம்மாள் தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

"கீத காந்தி"யில் கடைசியாக நடித்த அவர் தற்போது "மங்கையற்கரசி"யில் நடித்து வருகிறார்.

பி. சுப்புவேலு (திண்டுக்கல்)

சிட்டேடல் ஞான சௌந்தரியில் ஞான சௌந்தரியின் இரு குழந்தைகளின் தகப்பனார்கள் யார்?

ஐயா! எனக்கு வேறு எந்த வேலை வேண்டுமென்றாலும் கொடுங்கள். ஆனால் இந்தக் குழந்தைகளுக்குத் தகப்பனார்களைக் கண்டு பிடிக்கும் வேலை மட்டும் வேண்டாம்!

கே. பிச்சை முத்து (மாயவரம்)

சக்ரதாரியில் புஷ்பவல்லி கொஞ்சி விளையாடும் குழந்தை அவருடைய சொந்தக் குழந்தைதானா?

இந்தப் படத்தை ஒரு வருஷம் தாமதமாக எடுத்திருந்தால் புஷ்பவல்லிக்கு ஒருவேளை இந்த பாக்கியம் ஏற்பட்டிருக்கக்கூடும்!

சங்கரலிங்கம் பிள்ளை (சொக்கனூரணி)

கட்டபொம்மு, சந்தனத் தேவன் ஆகிய இரு கதைகளும், படங்களாக வெளிவரப் போகின்றனவாமே? உண்மையாகவா?

'சந்தனத்தேவன்' முன்பே வந்துவிட்டான்; 'கட்டபொம்மு'வுக்குத் தான் கதிமோக்ஷம் ஏற்படவில்லை.

எம். சுப்பையா (ராஜபாளையம்)

எனது நண்பன் கோவிந்தன் லலிதா-பத்மினியை மணக்க விரும்புகிறார். அவரை கீழ்ப்பாக்கத்திற்கு மட்டும் அனுப்பும்படி யோசனை சொல்ல வேண்டாம்.

அப்படியானால் அவரை நரகத்திற்கு அனுப்புவதில் உமக்கு ஆட்சேபணை இராதென்றே நினைக்கிறேன்!

உங்களதிர்ஷ்டத்தில் எழுதி இருப்பதென்ன?

நீங்கள் ஒரு வருஷத்திற்குள் நடக்கும் சுபா சுபங்களை அறிந்து கொள்ள வேண்டுமெனில், இன்றே ஒரு கார்டில் உங்களுடைய விலாசம், ஒரு புஷ்பத்தின் பெயர் எழுதியனுப்புங்கள். நாங்கள் ஜோதிட சாஸ்திர கணிதப்படி தங்களுக்கு உண்டாகும் லாப நஷ்டங்கள், எந்த வியாபாரத்தால் லாபம் கிடைக்கும், எங்ஙனம் பொருள் சேரும், உத்தியோகம் எப்போது கிடைக்கும், வேலை ஆட்களுடைய அபிவிருத்தி, தம்பதிகளுடைய சௌக்கியம், ஆரோக்கியம், வியாதி, தூரப்பிரயாணங்கள், வியாஜ்ஜியம் அல்லது, பரிக்ஷைகளில் தேர்ச்சி, கல்யாணம், பூமி, அல்லது, ஆஸ்தியினால் சுகம், புதிய நட்பு, உங்கள் கார்டு சேர்ந்த உடனே மாதவாரி பலனும், வருட பலனும் ரூ. 1-4-0க்கு தபாலில் V. P. யில் அனுப்புகிறோம். தபால் செலவு வேறு. துரதிர்ஷ்டத்தை அதிர்ஷ்டமாக்கிக்கொள்ளவும் வழியுண்டு; எழுதி அனுப்புகிறோம்; இதனால் வரப்போகும் கஷ்டங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம். ஒருமுறை பரிக்ஷித்தாலே தெரியும். உங்கள் ஜாதக பலன்களின் திறமையைத் தப்பென்று ருஜு செய்தால் கட்டிய பணம் வாபஸ் செய்யப்படும்.

பண்டிட். தேவ் தத் சாஸ்திரி ராஜ் ஜோதிஷர் (G.D.S.)

கர்த்தர்ப்பூர் (E. P.)

PT. DEV DUTT SHASTRI RAJ JYOTHSHI (G.D.S.)

KARTARPUR, (E. P.)

சென்னை நகரிலும் வெளியூர்களிலும்
வெளிவந்திருக்கும் "நல்ல தம்பி"
படத்தில் நடிக்கும் பானுமதி



"உண்மையைச் சொல்லுங்கள் ; நீங்கள் 'என் கணவரா' அல்லது அந்த தாசியின் கணவரா ?"

"என் கணவர்" தமிழ்ப் படத்தில்

டபலசங்கர்—நந்தினி

"நீங்கள் அவளுக்குத் தாலி கட்டியிருந்தாலும் உண்மையில் 'என் கணவர்' தானே!"

"என் கணவர்" தமிழ்ப் படத்தில்


கல்பனா

வேலைக்காரி

நல்லதம்பி

வி. என். ஜானகி நடிக்கும் "வேலைக்
காரி" இந்த மாதம சென்னையிலும்
வெளிவருகிறது.

பழங்கால நடிகர்களுள் ஒருவரான
வி. எஸ். மணி "விநோதினி"யில
விலலனுகத் தோன்றுகிருர்.



ஜமீனை ஒழிப்பதற்காக கிருஷ்ணன், மதுரம் இருவரும் திட்டம் போடுகின்றனர் ("நல்லதம்பி")

திரைக்குப் பின்

[21-ம் பக்கத் தொடர்ச்சி]

"இன்று நீங்கள் போகவே கூடாது" என்று சொல்லி அவனை இடைமறித்து நின்றாள் வசுமதி.

"வசு, இந்த ஒரு முறைதான் வாக்குக் கொடுத்ததற்காகப் போய் வந்து விடுகிறேன். பிறகு உன்னிஷ்டமில்லாமல் எந்த நடிகை விட்டிற்குமே நான் போகவில்லை" என்றான் பிரேம்குமார்.

"அதெல்லாம் முடியாது; இன்று நீங்கள் போகவே கூடாது" என்றாள்.

அவன் கோபம் எல்லை மீறியது. "இதோ பார், வசு! நான் வாக்குத் தவற முடியாது. நான் போய்த்தான் ஆகவேண்டும்" என்று கூறி அவன் வெளியே போவதற்காக வாசற் பக்கம் வேகமாக நடந்தான். அதே சமயம் வசுமதியும் மின்னல் வேகத்தில் அவனை அடைந்து அவனுடைய கோட்டைப் பற்றிக் கொண்டு "இன்று என்ன நேர்ந்தாலும் சரி. நான் உங்களை விடப் போவதில்லை" என்று கூறினாள்.

பிரேம் குமாருக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. பலவாராக யோசனை செய்ததன் பிறகு கோட்டைப் பற்றி யிருந்த வசுமதியின் கைகளை விடுவிக்க முயன்றான். அவள் குரங்குப் பிடியாகப் பற்றி யிருந்ததால் அவன் முயற்சி வீணாயிற்று. பலவந்தத்தை விடுத்து சமாதான முறையில் அவன் சொன்னவைகள் அவள் காதில் ஏறவில்லை. அதனால் மேலும் கோபமடைந்த அவன் தான் என்ன செய்கிறோம் என்று கூட யோசியாமல் வசுமதியின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தான். மறுகணம் கோட்டைப் பற்றியிருந்த வசுமதியின் கைகள் தளர்ந்தன. அவள் சுவற்றின் மீது சாய்ந்தாள்.

பிடியிலிருந்து விடுபட்டதும் பிரேம்குமார் "நீ வீணாக என் மீது சந்தேகப் படுகிறாய். நீ நினைப்பது அத்தனையும் தவறு" என்று சொல்லியபடியே மளமளவென்று நடந்து சென்று தயாராக இருந்த காரில் ஏறிக் கொண்டான்.

"வேண்டாம். போக வேண்டாம். அப்புறம் நான் உங்கள் வசு இல்லை" என்று வசுமதி அழுத குரலில் கூவியது பிரேம்குமாரின் காதில் விழுந்ததோ இல்லையோ தெரியவில்லை. அதற்குள் மோட்டார் விர்ரென்று உறுமிக் கொண்டு புறப்பட்டு விட்டது.

அடியின்னது என்று அறியாத வசுமதி பிரேம்குமாரின் செய்கையினால் அதை உணர்ந்தாள். கண் கலங்கினாள். அவளுடைய புருபுருத்த சிவந்த கன்னம் அடியினால் ரத்தம்போல் சிவந்து கணநேரத்தில் சுருங்கவும் செய்தது! அடியின் வலியையோ, கன்னத்தின் நிலையையோ வசுமதி பொருட்படுத்தவில்லை. தன்னை இம்மாதிரி நிராகரித்துவிட்டுப் போனதோடு "தான் நிரபராதி" என்று பிரேம்குமார் சொல்லியவண்ணம் போனதையே அவள் சிந்தித்துக் கொண்டிருந்தாள். 'உண்மையில் அப்படியிருந்தால் அவர் ஏன் இப்படி முரட்டுத்தனமாக நடந்துகொள்ள வேண்டும்? என்மீது உண்மையில் அன்பு இருந்தால் போகாமல் இருந்திருப்பார் அல்லவா?' என்று எண்ணினாள். பிரேம்குமார் படங்களில் நடிப்பதுபோலவே தன்னிடமும் நடிப்பதாக எண்ணினாள். ஆனால் மறுகணமே அவன் கடைசியாகச் சொல்லிச் சென்றது நினைவிற்கு வந்தது. 'அப்படியும் இருக்கலாம்' என்றே நினைத்தாள். அதே சமயம் அவள் மனம் கணவன் சொன்னது உண்மையா பொய்யா என்பதை ஆராயத் தொடங்கியது. பழைய சம்பவங்களெல்லாம் அவள் ஞாபகத்திற்கு வந்தன.

* * *

அச்சமயம் பிரேம்குமார் சுமார் ஆறு படங்களுக்கு மேல் நடித்து விட்டான். அவனுடைய புகழ் உச்ச நிலையை அடைந்திருந்தது. அக்காலத்தில் பிரேம்குமார் ஒவ்வொரு படத்திலும் ஒவ்வொரு புது நடிகையுடன் நடிப்பது வழக்கம். அவனது ஏழாவது படத்தின் கதா நாயகியாக வந்தவள் தான் மைதிலி. அவளுடன் முதல் படத்தில் நடித்ததும் அவனுடைய புகழ் மேலும் உயர்ந்தது. அதுவரை அவனுடன் நடித்த நடிகைகள் அனைவரையும் விட மைதிலி அவனுக்கு ஏற்ற கதாநாயகியாக இருந்தாள். ஆதலால் அவ்விருவரும் படங்களில் சேர்ந்தே நடிக்க வேண்டும் என்று ரஸிகர்கள் வற்புறுத்தினர், ஆதலால் படமுதலாளிகள் அவர்கள் இருவரையும் சேர்த்தே ஒப்பந்தம் செய்ய முற்பட்டனர்.

பிரேம் குமாரின் எட்டாவது படமான "வைராக்கிய வனிதை" படத்தின் வர்த்தகக் காட்சிக்கு மைதிலியும் வந்திருந்தாள். ரஸிகர்களுடைய பார்வையிலிருந்து தப்ப வேண்டுமே என்பதற்காக பிரேம் குமார் தான்மட்டும் முதலிலேயே தியேட்டருக்குச் சென்று பிறகு வசுமதியை அழைத்து வர மோட்டாரை அனுப்பினான். வசுமதியும் படம் பார்க்கச் சென்றாள்.

மோட்டாரிலிருந்து இறங்கிச் செல்லும்போது தியேட்டருக்குள் வைக்கப் பட்டிருந்த அழகிய "பானர்" அவள் கண்ணுக்குத் தென்பட்டது. மைதிலியும் பிரேம் குமாரும் ஜோடியாக இருக்கும் காதல் கட்டம் அதில் வர்ணம் தீட்டப்பட்டிருந்தது. அவர்கள் இருவரும் கன்னத்துடன் கன்னத்தைப் பொருத்திக் கொண்டு, சிரித்த வண்ணம் காட்சியளித்தது அவள் மனதில் 'சுரீர்' என்று தைத்தது. அவள் மனம் கலங்கியது. எனினும் சமாளித்துக் கொண்டு மேலே நடந்தாள். அச்சமயம், கூட்டமாக இருந்த சிலர் "டேய், பார்த்தாயா படத்தை! இவர்கள் ரிஜிஸ்டர் கலியாணம் செய்து கொண்டு விட்டார்களாம்டா! அதனால் தான் பிரேம்குமார் இவளுடன் இந்தப் படத்திலும் சேர்ந்து நடிக்கிறான். இனிமேல் அவன் வேறு ஒருத்தியுடனும் சேர்ந்து நடிக்க மாட்டானும்" என்றான்.

"ஏன்டா, 'பிரேம்குமாருக்கு முன்பே ஒருபெண்டாட்டி இருக்காள்னு ஒருபத்திரிகையிலே போட்டிருந்ததே?" என்று கேட்டான் இன்னொருவன்.

"இருந்தால் என்னடா? அவள் வீட்டிலே; இவள் ஸ்டுடியோவிலே!" என்று கிண்டலாகக் கூறினான் முந்தினவன்.

இந்த சம்பாஷணை வசுமதியின் உள்ளத்தை உலுக்கியது. இதில் கொஞ்சமாவது உண்மையில்லா விட்டால், இவர்கள் இப்படிப் பேசுவார்களா? என்று எண்ணிக் கொண்டே படம் பார்க்கச் சென்றாள். அன்று அவள் இந்த சஞ்சலத்தால் படத்தைக் கூடச் சரியாகப் பார்க்க வில்லை.

இன்னொரு சமயம் பிரேம்குமார் இரவு வெகு நேரம் கழிந்து வந்தான். அன்று அவனுக்கு ஸ்டுடியோவில் வேலை கூடக் கிடையாது. அப்படியிருந்தும் அவன் ஏன் அவ்வளவு நேரம் கழித்து வந்தான் என்று வசுமதி கேட்டதற்குச் சரி

உங்களுக்கு 'முதல் இரவை' பற்றி தெரியுமா?

இன்றேல் இன்றே வாசியுங்கள்!

முதல் இரவு

பல இளந்தம்பதிகளின் வாழ்க்கை விமர்சனம். வாழ்க்கையில் ஏற்படுகின்ற மனவேறுபாடு, கசப்பு ஆகியவற்றிற்கான காரணங்களை ஆராய்ந்து அவற்றை நீக்குவதற்கான வழிகளைக் கூறுகின்ற இனிமை ததும்பும் நடையில் எழுதியுள்ள சிறந்த நாவல்.

இதிலுள்ள பாத்திரங்கள் அனைவரும் இந்த பூவுலகில் நாம் எல்லோரும் சந்திப்பவர்கள்தான். 'ரோகிணி' போன்ற கல்லூரி மாணவிகள், நரசுவை போன்ற கோழி...பித்தர்கள், சுந்தாவைப் போன்ற காந்தி பக்தர்கள், ராஜாவைப்போன்ற சரசசல்லாபிகள், இவர்களின் வாழ்க்கையை விவரிக்கும் பொழுது நம்மை அறியாமலே நமது உள்ளத்தில் ஒரு வித கிளர்ச்சியை உண்டாக்குகிறது.

விலை ரூ. 3-0-0, தபால் சிலவு அணா 6

(வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன்)

விநியோகஸ்தர்கள்:

மோகன் அன் கம்பெனி, 43, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-1.

யாக பதில் சொல்லவில்லை. அதனுடன் வசுமதியின் சந்தேகம் வலுத்தது. அதற்காக அன்று ஒரு சிறு யுத்தம்கூட நடந்தது. ஆனால் கடைசிவரை பிரேம் குமார் தான் எங்கு சென்றிருந்தேன் என்பதைக் கூறவேயில்லை.

வேறொரு தினம் நடந்த சம்பவம் இது. அன்று பிரேம்குமார் தன் ஸ்டுடியோவில் வேலை இருப்பதாகச் சென்றான். அன்று வீட்டில் சில பந்துக்கள் அவனைக் காண வந்திருந்தனர். அதை அறிவிக்க வசுமதி ஸ்டுடியோவுக்குப் போன் செய்தாள். ஆனால் ஸ்டுடியோவிலிருந்து வந்த செய்தி அவளைத் திகைக்க வைத்தது. அன்று பிரேம்குமாருக்கு ஸ்டுடியோவில் வேலையில்லை என்றும், அவன் அங்கு வரவேயில்லை என்றும் தகவல் கிடைத்தது. இது நடந்து சிறிது நேரத்திற் கெல்லாம் கார் வந்தது. ஆனால் அதில் பிரேம் குமார் வரவில்லை. டிரைவர் மாத்திரம் வந்து பிரேம்குமார் மைதிலி வீட்டிற்குப் போயிருப்பதாகவும், காரை மட்டும் திருப்பி அனுப்பியதாகவும் சொன்னான்.

இவைகள் எல்லாவற்றையும் விட இரண்டே நாட்கள் முன்பு நடந்த சம்பவம் தான் அவள் மனதைப் பெரிதும் பாதித்தது. அன்று பிரேம் குமாருடைய புதிய படத்தின் வர்த்தகக் காட்சி. எப்பொழுதும்போல் வசுமதியையும் அவன் அழைத்துச் சென்றான். சற்று முன்பே சென்றதால் ரஸிகர்கள் கண்களிலிருந்து பிரேம்குமார் தப்பி விட்டான். நேராகத் தியேட்டரின் உள்ளே இருவரும் சென்றனர், தியேட்டரின் உள்ளே கால் எடுத்து வைத்ததுமே மைதிலி அவர்கள் கண்ணில் பட்டாள், மைதிலியும் அவர்களைக் கண்டாள். உடனே அவர்களை தன் பக்கத்தில் வந்து உட்காரும்படி சமிக்ஞை செய்தாள். இருவரும் அங்கு சென்று உட்கார்ந்தனர். ஆனால் மைதிலி பக்கத்தில் பிரேம்குமாரும், அவன் பக்கத்தில் வசுமதியுமாக உட்கார்ந்தனர். இது ஒரு பக்கத்தில் வசுமதிக்கு ஆத்திரமாக இருந்தாலும் அதை அடக்கிக் கொண்டாள்.

படம் ஆரம்பித்து அதில் காதல்கட்டங்கள் வந்த போதெல்லாம் மைதிலியும் பிரேம் குமாரும் குசுகுசுவென்று பேசுவதும், கேலிசெய்வதும், சிரிப்பதுமாக இருந்தனர். தான் ஒருத்தி இருப்பதை அவர்கள் அடியோடு மறந்து விட்டது போல் தோன்றியது வசுமதிக்கு. அவள் மனம்பட்ட அவஸ்தைசொல்லத் தரமற்றதாகியது.

இது போதாதென்று அன்று ஆட்டம் முடிந்ததும் நடந்த சம்பவம் வசுமதியை மேலும் திடுக்கிடச் செய்தது. ஆட்டம் முடிந்ததும் பிரேம்குமார் வசுமதியை வீட்டிற்குப் போகும்படியும், தனக்கு ஏதோ வேலை இருப்பதாகவும் கூறிவிட்டு மைதிலியின் காரில் அவளுடன் சென்றான். அன்று அவன் இரவு வெகு நேரம் கழித்தே வீட்டிற்கு வந்தான். அன்றும் வசுமதியின் கேள்விகளுக்கு பிரேம்குமார் சரியான பதிலளிக்கவில்லை.

இவைகளையெல்லாம் எண்ணி எண்ணிப் புழுங்கினாள் வசுமதி. பிரேம்குமார் தன்னைத் தள்ளி விட்டுப் போகும் சமயம் சொன்ன வார்த்தைகள் உண்மையாக இருக்கும் என்று அவளால் நம்ப முடியவில்லை. அவள் தீர்மானமாக தன் கணவன் சினிமாவில் மாத்திரமல்ல, தன்னிடத்திலும் கூட நடிப்பதாகவே முடிவு கட்டினாள். அன்று அந்த சினிமா ரஸிகர்கள் வம்பளந்தது போலவே தன் கணவன் படத்தில் மட்டுமன்றி வாழ்க்கையிலும் மைதிலியின் காதலனாக ஆகியிருப்பார் என்று அன்றைய சம்பவம் ஊர்ஜிதப் படுத்தியது.

மனதை வேறொருத்திமிடம் பறிகொடுத்தவரிடம் இனி வாழ்வதெப்படி என்று சிந்தித்தாள். வசுமதியின் சிந்தனையில் அதற்குப் பரிகாரமாகக் கிடைத்தது அவள் வாழ்க்கையிலிருந்து விடுதலை பெறுவது தான்.......

கணவன் சொன்னது ஒரு வேளை உண்மையாகவே இருந்து, தான் அதை சரியாகத் தெரிந்து கொள்ளாமல் இருந்தால் என்றுகூட ஒரு கேள்வி பிறந்தது. ஆனால் இந்தக் கேள்வியாலெல்லாம் வசுமதியின் முந்திய முடிவை மாற்ற முடியவில்லை. அவள் தன் முடிவின் படி செய்து விடுவது என்ற திடசித்தத்துடன் சோபாவிலிருந்து எழுந்து தன் அறைக்குச் சென்றாள். கதவைத் தாளிட்டாள், பிறகு ஒரு காகிதத்தில் தன் முடிவை எழுதிவைத்தாள். முடிவை நிறைவேற்ற மேஜையின் மேல் ஒரு நாற்காலியை வைத்து அதில் ஏறி உத்திரத்தில் இருந்த வளையத்தில் கயிற்றைப் போட்டு ஒரு நுனியை அதில் கட்டினாள். மறு நுனியில் சுருக்கிட்டாள்;

அதே சமயத்தில் மோட்டார் வந்த சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து 'வசுமதி, வசுமதி' என்று பிரேம் குமார் கூப்பிட்ட குரலும் கேட்டது. சுருக்குக் கயிற்றைக் கையில் பிடித்திருந்த வசுமதிக்கு இப்பொழுது என்ன செய்வது என்ற பிரச்னை எழுந்தது. அதுவரை தன்னை மாய்த்துக்கொள்வது என்ற தீர்மானத்திற்கு வந்த அவள், கணவன் வருகையால் தர்மசங்கட நிலையை அடைந்தாள்

சில விநாடிகள் தான் ஆகியிருக்கும். பிரேம் குமார் வசுமதியின் அறைக் கதவைப் பலமாகத் தட்டி அவளைக் கூப்பிட்டான். வசுமதிக்கு மேலும் சங்கடமாகியது. தான் நினைத்ததைக் கைவிட்டு விட்டு கதவைத் திறப்பதா, இல்லை, முடிவுப்படி செய்வதா, என்ற பிரச்னை எழுந்தது. 'கதவைத் திறந்தாலும் தற்கொலைக்கு ஏற்பாடு செய்ததைக் கண்டு கணவன் கோபமடையலாம். அதனால் தனக்கு அவமானம்தான் ஏற்படும். பின்.........?' மனப் போராட்டத்திலும் தடங்கல்தான்.

அதே சமயம் பிரேம் குமார் கதவை மேலும் பலமாகத் தட்டலானான். வெகு நேரம் கதவைத் தட்டியும் கதவு திறவுபடாததைக் கண்டு, அவன் சந்தேகம் கொண்டான். சரி ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது என்று முடிவு செய்தான். உடனே கோவிந்தன், கந்தசாமி என்ற வேலைக்காரர்களையும், தங்கராஜ் என்ற கார் டிரைவரையும் அழைத்து கதவை உடைக்கும்படி கட்டளை யிட்டான். கட்டளை பிறந்தது தான் தாமதம்; கதவு கடப்பாரையால் தாக்கப்பட்டது. கதவை உடைக்கும் சப்தம் கேட்டதும் வசுமதி 'இனி தாமதிக்கக்கூடாது. சீக்கிரமே முடிவிற்கு வந்துவிட வேண்டும்' என்று தீர்மானித்தாள். கதவின்மீது விழும் ஒவ்வொரு பலத்த இடியும் அவள் இதயத்தில் விழுவதாகவே கருதினாள். உயிருடன் இருந்தாலும் அவமானம். இறந்தாலும் அவமானம்தான். உயிருடன் இருந்துவேதனைப்படுவதைவிட இறந்து அவமானம் அடைவதே மேல் என்று முடிவு செய்தாள். அவள் முடிவிற்கு வந்த சமயம் கதவு பாதி உடைய ஆரம்பித்தது. வசுமதி தான் தற்கொலை செய்து கொண்டால் தன் கணவன் நிலை என்ன ஆகும்? அவனுடைய கௌரவம் எப்படி பாதிக்கும்? என்றுமேலும் சிந்திக்காமல் கயிற்றைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு தொங்கி விட்டாள்.

கதவு உடைபட்டு உள்ளே நுழைந்த பிரேம் குமார், கோவிந்தன், கந்தசாமி, தங்கராஜ் முதலியவர்கள் வசுமதி ஒரு கயிற்றில் தொங்கிக்கொண்டு துடிப்பதைக் கண்டு திகைத்தனர்.

பிரேம் குமார் ஓடிச் சென்று கழுத்துக் கயிறு இறுகாதபடி வசுமதியைத் தூக்கிக்கொண்டான் வேலைக்காரர்கள் தாமதமின்றி கழுத்துக் கயிற்றைத் துண்டித்தனர். வசுமதி தற்கொலையிலிருந்து தப்பினாள்.

வசுமதி அப்பொழுது தன்சுய நிலை தவறியிருந்தாள். கோவிந்தனைச் சூடாகக் காப்பிகொண்டு வரும்படி கட்டளையிட்டான். காப்பி வந்ததும் அவளை அருந்தச் செய்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் வசுமதி கண்களைத் திறந்து பார்த்து ஒரு பெருமூச்சும் விட்டாள்.

உலகமே அஸ்தமித்து விட்டதாக எண்ணிவிட்ட பிரேம்குமாருக்கு அவள் கண்விழித்ததும்தான் உயிர்வந்தது.

வேலைக்காரர்களை வெளியே போகச் சொல்லிவிட்டு பிரேம் குமார் வசுமதியின் கன்னத்துடன் தன் கன்னத்தை வைத்துக்கொண்டு, மெல்லிய குரலில் "என்ன காரியம் செய்தாய் வசு. இப்படியெல்லாம் நீ செய்யலாமா?" என்றான்.

உலகபந்தங்களையும், பிரியமற்ற கணவனையும் விட்டுப் பிரிந்துவிடப் போவதாக எண்ணி, இருமாந்து போன வசுமதிக்கு, எதிர்பாராத விதமாக இடைஞ்சல் ஏற்பட்டது வருத்தமாகவே இருந்தது. ஆதலால் அவளால் எவ்வித பதிலும் கூறமுடியவில்லை.

வசுமதி பதில் கூறாததால் என்ன செய்வது என்று தோன்றாமல் அவளது கைகளை வருடிக்கொண்டிருந்த பிரேம் குமாரின் கண்களில், மேஜைமீது வசுமதி எழுதிவைத்த கடிதம் தென்பட்டது. உடனே அதைத் தாவி எடுத்தான். வசுமதி அதை அவனிடமிருந்து பிடுங்க லேசாக முயன்றாள். ஆனால் பிரேம்குமார் கடிதத்தை தூரப் பிடித்துக்கொண்டு பிரித்தான். கடிதம் தனக்கெழுதப்பட்டிருந்ததை அறிந்ததும் பரபரவென்று ஆவலுடன் படித்தான்.

அதைப் படித்து முடித்ததும் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். "வசுமதி! உன்னை எவ்வளவோ புத்திசாலி என்று எண்ணியிருந்தேன். என் நடத்தையைப்பற்றி நீ இவ்வளவுதூரம் சந்தேகிப்பாயென்று நான் கொஞ்சமும் நினைக்கவேயில்லை. நான் இப்பொழுது என்ன சொன்னாலும் உன் சந்தேகம் தீரப்போவதில்லை; இல்லையா?"

வசுமதி பதில் கூறவில்லை. பிரேம் குமார் ஒரு நிமிஷம் யோசித்தான். பிறகு, "வசுமதி! உனக்கு உடம்பு இப்பொழுது எப்படி இருக்கிறது? என்னோடு ஒரு இடத்திற்கு வர முடியுமா?" என்று கேட்டான்.

"எனக்கு உடம்பு சரியாகிவிட்டது. ஆனால் எங்கே கூப்பிடுகிறீர்கள்?"

"சொல்கிறேன். கிளம்பு."

"எங்கே போவதற்கு?"

“நீ புறப்படேன். தன்னால் தெரியும்” என்று வசுமதியை பிரேம்குமார் தூக்கி நிறுத்தினான். இருவரும் மோட்டாரில் புறப்பட்டனர். சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த மோட்டார் ஒரு அழகான பங்களாவின் முன்சென்று நின்றது.

வசுமதியை பிரேம்குமார் உள்ளே அழைத்துச் சென்று, முன் கூடத்திற்கு ஒட்டியிருந்த தாழ்வாரத்தில் இருக்கச் சொல்லி, “வசுமதி, நீ இங்கேயே மறைந்து கொண்டு நடப்பவற்றைக் கவனி” என்று கூறிவிட்டு அவளிடம் பதிலை எதிர்பாராமலே கூடத்தில் இருந்த ஒரு சோபாவில் போய் அமர்ந்தான்.

அடுத்த நிமிஷம் மைதிலி மாடியிலிருந்து படிக்கட்டு வழியாய் இறங்கி கூடத்திற்கு வந்தாள். அவள் பிரேம்குமாரைப் பார்த்ததும் ஆச்சரியமடைந்து “இப்பொழுதுதானே நீங்கள் வீட்டிற்குப் போனீர்கள். அதற்குள் ஏன் திரும்பி வந்துவிட்டீர்கள்” என்று கேட்டபடி அவனுக்கு எதிரிலிருந்த சோபாவில் உட்கார்ந்தாள்.

“உங்கள் அம்மாவுக்கு உடம்பு எப்படி இருக்கிறது என்று பார்த்துப்போக வந்தேன்” என்று கூறிக்கொண்டே அவள் உட்கார்ந்திருந்த சோபாவில் அவள் அருகில்போய் அமர்ந்தான்.

அவள் ஆச்சரியம் அடைந்தாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் “இப்பொழுது கொஞ்சம் சுமாராக இருக்கிறது. ‘பயமில்லை’ என்று டாக்டர் சொல்லிவிட்டுப் போனார்” என்றாள்.

“இப்படி திடீரென்று அம்மாவுக்கு உடம்புக்கு வந்திராவிட்டால்...” என்று சொல்லிக்கொண்டே அவளருகில்கொஞ்சம் நெருங்கினான்.

மைதிலி சற்று அச்சத்துடன் “வரா விட்டால் நாம் சந்தோஷமாக மஹாபலிபுறம் போயிருப்போம்” என்று கூறிக்கொண்டு சோபாவின் மறு கோடிக்கு நகர்ந்து உட்கார்ந்தாள்.

“ஏன் மைதிலி அப்படி விலகி உட்காருகிறாய்?” என்று கேட்டுக்கொண்டே பிரேம்குமார் அவள் அருகில் நகர்ந்து அவளுடைய தோள்களில் கையைப் போட்டான். அதே சமயம் அவன் கன்னத்தில் “பளீர்!” என்று ஒரு அறை விழுந்தது. மறுகணம் உடல் நடுங்க, படபடப்புடன் மைதிலி “ஹூம். இப்பொழுது தானே தெரிகிறது உன் யோக்யதை! பரம யோக்யனைப்போல் நடித்து என்னுடன் மஹாபலிபுறம் வருகிறேன் என்றதன் அர்த்தம். சீ. நீ ஒரு மனுஷனா? உனக்குக் கலியாணமாகி மனைவிகூட இருக்கிறாளே; உனக்கு அக்கா தங்கை இல்லையா!”

ரூ. 10,000 இனாம்.

தங்கம் தோலா ஒன்று ரூ 2—8—0

அமெரிக்கன் நியூ கோல்டின் பிராபல்யம்

ஒரு முறை பரீட்சித்தால் எப்பொழுதும் திருப்தி
ஹஸாரிலால் பதன் கோட் எழுதுவது;

உமது அமெரிக்கன் நியூ கோல்ட் பார்ஸல் கிடைத்தது. எனது நன்றி. இந்த தங்கத்துக்கும் உண்மையான தங்கத்துக்கும் வித்தியாசமே எனக்கு புலனாகவில்லை. மறு தபாலில் தயவுசெய்து எனக்கு 6 தோலா அனுப்புங்கள். மற்ற ஆர்டர்கள் அடுத்து வரும்.

உறைகல் மேல்! இந்த தங்கம் உண்மை தங்கத்தின் அடையாளத்தை செய்கிறது. இதை கம்பியாகவும் தகடுகளாகவும் செய்யலாம். இதைக் கொண்டு பலவித ஆபரணங்களும் தயாரிக்கலாம். மிக்க புத்திசாலியான நகை வியாபாரியும் இதை உண்மை தங்கமில்லை என்று கூறுவது அசாத்தியம். மேற்படி சர்டிபிகேட்டை பொய் என்று நிரூபிப்பவருக்கு ரூ. 10,000 இனாம் கொடுக்கப்படும்.

இதை பிரசித்தப்படுத்தவே தோலா விலை ரூ. 2-8-0க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தபால் செலவு பிரத்யேகம். 3 தோலாவுக்கு ரூ. 7. 6 தோலாவுக்கு ரூ. 13. 15 தோலாவுக்கு ரூ 30. 40 தோலாவுக்கு ரூ. 70.

திருப்தியில்லாவிட்டால் பணம் வாபஸ் அனுப்ப உத்தரவாதம்

இலவசம்: மூன்று தோலா வாங்குபவர்களுக்கு பாக்கிங் இலவசம். ஆறு தோலா வாங்குபவர்களுக்கு பாக்கிங்கும் தபால் செலவும் இலவசம்.

IMPERIAL COMMERCIAL COMPANY REGD:
(G. D. M.) JULLUNDER CITY.

என்று கூறி, சிறிது நேரம் மௌனமாக அவனைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு, பிறகு "உனக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும். கலை, கத்திரிக்காய் என்று வாய் வேதாந்தம் பேசி எல்லோரையும் ஏமாற்றி வந்தாய் அல்லவா? கொஞ்சநேரத்தில் உன் நடிப்பு போலீஸ்காரர் கையில் உதை படும்போது தெரிந்துவிடும்" என்று சொல்லி டெலிபோன் ரிஸிவரைக் கையிலெடுத்து நம்பரைத் திருப்பப் போனாள். பிரேம்குமார் சட்டென்று அவள் கையைப்பற்றி "வேண்டாம்; மைதிலி ஏதோ தெரியாமல் செய்து விட்டேன். மன்னித்துக் கொள்" என்றான்.

"மன்னிப்பதெல்லாம் நான் இல்லை. போலீஸ்காரர்கள்தான். காமப்பித்துப் பிடித்த பேயே. கையை விடு. இல்லாவிட்டால் இப்பொழுதே வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, கட்டிப்போடச் சொல்வேன்" என்றாள் மைதிலி.

பிரேம்குமார் மறுபேச்சுப் பேசாமல் கையை விட்டு விட்டான். மைதிலி அவனை லட்சியம் செய்யாமல் திரும்பவும் டெலிபோனில் நம்பரைத்திருப்பினாள். ஒன்று, இரண்டு, மூன்று இன்னும் ஒரே நம்பர்தான் பாக்கி. வெளித்தாழ்வாரத்திலிருந்தபடி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த வசுமதி அங்கு ஓடிவந்து மைதிலியின் கைகளைப் பற்றிக் கொண்டாள். கெஞ்சும் குரலில் "மைதிலி! வேண்டாம், டெலிபோன் செய்ய வேண்டாம். உங்களை நான் சந்தேகித்தது தவறு!" என்று கூறினாள் வசுமதி.

மைதிலிக்கு விஷயம் ஒன்றுமே புரியவில்லை. டெலிபோன் ரிஸிவரை அதன் இடத்திலேயே வைத்துவிட்டு வசுமதியை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

வசுமதி மைதிலியின் இருகைகளையும் பற்றிக்கொண்டு," என் கணவர் செய்தவைகளையெல்லாம் மறந்துவிடு. இதற்கெல்லாம் காரணம் நான்தான். என்னை மன்னியுங்கள்" என்றாள் கண்களில் நீர்பெருக.

மைதிலியின் ஆச்சரியம் மேலும் பன்மடங்காகியது. அவள் தன் கண்களை அகல விரித்து பிரேம்குமாரையும், வசுமதியையும் பார்த்து "உங்களால் ஏற்பட்டது என்றீர்களே, அதன் அர்த்தம் எனக்குப் புரியவில்லையே!" என்று கேட்டாள்.

"நீங்கள் என் கணவருடன் சேர்ந்து படங்களில் நடிப்பதையும், சகஜமாகப் பழகுவதையும் கண்டு நான் உங்கள் மீது தப்பர்த்தம் கொண்டேன். அதற்கு ஒத்தாற்போல் பல சம்பவங்களும் இருந்தன. இன்று நீங்கள் எங்கோ போவதாகவும், என் கணவரும் உங்களுடன் வரவேண்டும் என்று நீங்கள் சொன்னதாகவும் என்னிடம் அவர் சொன்னார். போனால் இரண்டு மூன்று நாட்கள் பிடிக்கும் என்றும் சொன்னார். இது என் சந்தேகத்தை மேலும் அதிகரித்தது. நான் அவர் போவதைத் தடை செய்தேன். அவர் என் பேச்சைத் தட்டிவிட்டு, தன் வாக்கைக் காப்பதற்காகப் போவதாகச் சொல்லிவிட்டுச் சென்றார். பிறகு நான், கணவன் அன்பில்லாது வாழ்வதைவிட இறப்பதே மேல் என்று பிராணத் தியாகம் செய்து கொள்ள முயன்ற சமயம் அவர் திரும்ப வந்து என்னைக் காப்பாற்றினார். அச்சமயமும் உங்கள்மீது கொண்ட சந்தேகம் எனக்குப் போகவில்லை" என்றாள்.

மைதிலி முன் நிலையிலேயேதான் இருந்தாள். அவள் வாயிலிருந்து ஒரு சொல்லும் வெளிப்படவில்லை.

வசுமதி திரும்பவும் "என் சந்தேகங்களைப் போக்கவே அவர் என்னை இங்கு அழைத்து வந்தார். திருஷ்டாந்தமாக எனக்கு விளக்கவே உங்களிடம் அப்படி அடாத முறையில் நடப்பதுபோல் நடித்தார். இவைகளை மறந்து மன்னித்து விடுங்கள்" என்று மைதிலியின் கால்களைப் பற்றப்போனாள்.

மைதிலி சட்டென்று அவளைத் தூக்கிப் பிடித்து, "சே சே, இது என்ன? நீங்களா என்னிடம் மன்னிப்புக் கேட்பது? உங்களுக்குச் சந்தேகம் ஏற்படுவதற்கு ஏதுவாக நடந்துகொண்டதற்கு நானல்லவோ மன்னிப்புக்கோர வேண்டும்" என்றாள்.

"இல்லையில்லை. கலைக்காகப் பாடுபடும் உங்களை நான் சந்தேகப்பட்டேன். உங்களுடைய நேர்மையைக் கண்கூடாகக் கண்டபிறகு நான் உங்கள் கால் தூசுக்கும் சமமில்லை என்றே நினைக்கிறேன். பவித்திரமான உங்களையும், அவரையும் பழிதப்படுத்தியதற்கு நீங்கள் இருவருமே என்னை மன்னிக்க வேண்டும்" என்று கண்ணீர் வடித்த வண்ணம் கூறினாள் வசுமதி.

மைதிலி அவளை மார்புடன் அணைத்துக் கொண்டு, "சில விநாடியில் உங்கள் கணவரை காமாந்தகாரனாக்கி விட்டீர்களே, நீங்கள் சந்தேகப்பட்டபோக அவரை நானும் நிந்திக்க வல்லவா ஆகிவிட்டது. அவர்போன்ற ஒரு நேர்மையான மனிதர் கிடைப்பதே அரிது..." என்றாள்.

"அதனால் பரவாயில்லை. தற்கொலைக்குக்கூட தூண்டிவிட்ட வசுமதியின் சந்தேகம் தீர்ந்துவிட்டதே! அதுவே எனக்கு பெருத்த சந்தோஷத்தை அளிக்கிறது" என்று கூறினான் பிரேம்குமார்.

புஸ்தகப் பொழுது

சிறுமி

[மாதம் இரு முறை பத்திரிகை. ஆசிரியர். ராமநாராயணன். விலாஸம்: சிறுமி காரியாலயம், ராயவரம், திருமயம், எஸ். ஐ. ஆர். தனிப்பிரதி விலை அணா ஒன்றரை.]

சிறுவருக்கும் மாதருக்கும் பிரத்தியேகமாகப் பத்திரிகைகள் இருக்க 'சிறுமி' களுக்கென்று ஒரு பத்திரிகை வேண்டாமா? அது குறை குறைதானே! இதைப் போக்கவென்றே 'சிறுமி' என்ற பெயரில் பத்திரிகை ஆரம்பித்திருக்கின்றனர். ஆனால் இதில் கதை கட்டுரை எழுதியுள்ளவர்களும், ஆசிரியரும் சிறுமிகளல்ல என்பதைக் குறிப்பிடுகிறேன். சிறுவர், மாதர் முதலியவர்களுக்குப் பத்திரிகை நடத்த முன் வருபவர்கள் 'ஆண்களு'க்காக ஏன் ஒரு பிரத்யேகப் பத்திரிகையை நடத்தக்கூடாது? அதையும் யாராவது ஒருவர் செய்து விட்டால் அக்குறையும் நீங்கிவிடுமல்லவா?

சௌ சௌ

[மாதம் இருமுறை பத்திரிகை. ஆசிரியர் எஸ். ஸௌந்தர ராஜன். வெளியிடுவோர்: ஆ. குருமூர்த்தி, 20. அஷ்டபுஜம் ரோடு, சூளை, மதராஸ் 7. தனிப்பிரதி விலை அணா ஒன்று]

சிறுவர்களுக்காகத் தோன்றிக் கொண்டிருக்கும் பத்திரிகைகளில் 'சௌ சௌ'வும் ஒன்று. ஆனால் இதில் ஒரு விசேஷம். ஆங்கிலத்தில் டைஜஸ்ட் இருப்பதுபோல் இதிலும் ஒவ்வொரு இதழிலும் வேறு பத்திரிகையில் வந்த சிலவற்றைப் பொருக்கி வெளியிடுகிறார்கள். இதுதான் இப்பத்திரிகையின் விசேஷ அம்சம். மற்றபடி கதை கட்டுரை, துணுக்கு, கதைகள் சகிதம் காட்சி அளிக்கிறது.

குங்குமம்

[மாதப் பத்திரிகை. ஆசிரியை. எஸ். விசாலாட்சி. விலாசம். 'முரளி' பச்சையப்பன் ஹாஸ்டல் ரோடு, மதராஸ். 10. தனிப்பிரதி விலை அணா எட்டு]

இந்து மாதர்களின் பரம்பரைச் சொத்தான 'குங்குமம்' இப்பத்திரிகையின் பெயராக அமைந்திருக்கிறது. மாதர்கள் முகத்தை அலங்கரிக்கும் 'குங்குமம்' அவர்கள் உள்ளத்தையும் கவர்ந்து, அறிவையும் பெருக்கும் வண்ணம் ஆசிரியை எஸ். விசாலாட்சி பத்திரிகையை வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்த் தொண்டன்

[மாதப் பத்திரிகை, ஆசிரியர்: வித்துவான். சா. ரா. வேணுகோபாலப் பிள்ளை. விலாசம், 130. இராச வீதி, பெரிய காஞ்சீபுரம். தனிப்பிரதி விலை அணா நான்கு.]

தொண்டன் உடல் பூராவுமே தமிழ் மணம் கமழ்கிறது. கதைகளும் கட்டுரைகளும் அதற்குரிய வர்ணப்படங்களும் வெகு நன்றாக இருக்கின்றன. குழந்தைகளுக்காக பிரசுரித்திருக்கும் படங்களுடன் கூடிய கதை வெகு ஜோர். இவையெல்லாவற்றையும்விட மூவர்ண ஆர்ட் அட்டை அதி அற்புதமாக இருக்கிறது.

திரை தூதன்

[மாதம் இருமுறை பத்திரிகை. ஆசிரியர். சேரன், விலாசம்: 1. தர்மராஜா கோவில் சந்து, சென்னை 1. தனிப்பிரதி விலை அணா இரண்டு.]

திருவள்ளுவர் ஆண்டுத் தொடக்கத்திலே வெளி வந்திருக்கும் 'திரைத் தூதன்' ஒரு சினிமாப் பத்திரிகை. இதில் சினிமாச் செய்திகள், விமர்சனங்கள், பேனாமுனை என்ற தலைப்பில் பலருக்குப் பகிரங்கக் கடிதங்கள் எல்லாம் நன்றாக இருக்கின்றன. ஆனாலும் முதல் இதழிலேயே கேள்வி பதிலையும் சேர்த்திருப்பதுதான் இவைகளுக்குத் திருஷ்டிபரிகாரமாக இருக்கிறது.

வரப்பெற்றோம்

ஸ்ரீராம் சில்க் பாக்டரி (கோட்டூர், தென் திருவாங்கூர்) யின் மகாத்மா காந்தி ஞாபகார்த்தமாக அண்ணலின் உருவப் படம் அச்சிடப்பட்ட ஸில்க் கைக்குட்டைகள் வரப்பெற்றோம்.

"ஆபாசப் படத் தயாரிப்பில் இடுபடக்கூடாது"

டெக்னீஷியன்களுக்கு கல்வி மந்திரி உபதேசம்

இம்மாதம் 6-ந் தேதி, தேனம்பேட்டை காங்கிரஸ் மைதானத்திலுள்ள தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி டாகுமென்டரி தியேட்டரில், தென்னிந்திய சினி டெக்னீஷ்யன்கள் சங்கக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் ஸ்ரீ. எல். வி. பிரசாத், கல்வி மந்திரி அவினாசிலிங்கம் செட்டியாரையும், மற்றுமுள்ளவர்களையும் வரவேற்றார்.

சமீபத்தில் ஐரோப்பாவிலும், இங்கிலாந்திலும் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு வந்துள்ள, 'பட்டேல் இந்தியா லிமிடெட்' ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஸ்ரீ. எம். ஆர். விட்டல், மேனாடுகளில் டாக்குமென்டரி படங்களை ஒரு பொழுது போக்காக எண்ணி விடாமல் கலையாக மதித்து சிரத்தை காட்டி வருகிறார்களென்றும், மேனாடுகள் கல்வி போதிக்கக் கூடிய டாகுமென்டரி படங்களுக்கென நிதி ஒதுக்கியுள்ளன என்றும், இந்திய சர்க்காரும் இத்துறையில் முனையவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

கனம் மந்திரி, சென்னை சர்க்கார் 1950-ம் வருஷ ஆரம்பத்தில் ஒரு பிலிம் லைப்ரரியை ஏற்படுத்தப் போவதை அறிவித்தார். ஸினி டெக்னீஷ்யன்கள் தங்களுடைய சுய மரியாதைக்குக் குறைவான படங்களில் ஈடுபட மறுத்து விட வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார். டாக்குமென்டரி படங்களைப் பற்றி அவர் பின் கண்டபடி குறிப்பிட்டார் :—

"சினிமாவை கல்வி வளர்ச்சிக்கான ஒரு சிறந்த சாதனமாக உபயோகித்துக் கொள்ள சர்க்கார் ஒரு திட்டத்தைப் பரிசீலனை செய்து வருகின்றனர். அதற்காக ரூ. 40,000 பெறுமானமுள்ள படங்களை சர்க்கார் வாங்கியுள்ளனர். டாக்குமென்டரி படங்களுக்கு சர்க்கார் ஒரு மார்க்கெட்டை ஏற்படுத்திவிட்டனர். அதைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டியது பட முதலாளிகளின் கடமை. சுகாதாரம், கல்வி, விவசாயம், கைத்தொழில் போன்ற எத்தனையோ விஷயங்களைப் பற்றி டாக்குமென்டரிப் படங்களை எடுக்கலாம். அப்படிப் படம் எடுக்கிறவர்களுக்கு சர்க்கார் சகல வசதிகளும் அளிக்கும்."

தனிப்பட டாக்குமென்டரி படம் எடுப்பவர்களுக்கு குறைந்த பக்ஷம் 25 சத விகித லாபம் உத்திரவாதம் அளித்து, தனிப்பட்டவர்களையும் சேர்த்துக் கொண்டு, சர்க்கார் 'டாகுமென்டரி பிலிம் கார்ப்பொரேஷன்' ஒன்றை நிறுவ வேண்டுமென டைரெக்டர் சுப்ரமண்யம் கூறினார்.

இந்திய சர்க்காரிடம் முறையிட்டுக் கொண்டதன் பயனாக, பள்ளிக் கூடங்களின் உபயோகத்திற்காக வாங்கப்பட்ட 16 மில்லி மீட்டர் புரொஜெக்டர்களுக்கு வசூலித்த வரிகளைத் திருப்பித் தருவது பற்றி இந்திய சர்க்கார் யோசித்து வருவதாக கனம் மந்திரி அறிவித்தார்.

காரியதரிசி ஸ்ரீ. என். கிருஷ்ணஸ்வாமி வந்தனோபசாரம் கூறினார். கூட்டத்தின் முடிவில் மூன்று 16 மில்லி மீட்டர் படங்கள் திரையிட்டுக் காட்டப் பட்டன.

சினிமா மூலம் கல்வி

சினிமாக்களின் மூலம் பிரத்யட்ச கல்வி போதிக்கும் திட்டம் ஒன்றை இம் மாதம் 8-ந் தேதி மேயர் ஸ்ரீ. எஸ். ராமஸ்வாமி நாயுடு ஆரம்பித்து வைத்தார். இந்த வைபவம் சென்னை ஆயிரம் விளக்கு கார்ப்பொரேஷன் பையன்கள் பள்ளிக்கூடத்தில் நடைபெற்றது. இந்தத் திட்டம் கார்ப்பொரேஷன் கல்வி இலாகாவினால் வகுக்கப்பட்டதாகும்.

★ படங்களில் பெயர்கள்

சினிமாப்படங்களில் நடிக,நடிகைகளின் பெயர்கள் செல்லும் வேகத்தில் சுமாராகப் படித்தவர்களுக்கே வாசிப்பது கஷ்டமாக இருக்கிறது. படம் காணச் செல்பவர்களில் பெரும்பான்மையோர் எழுத்து வாசனை யில்லாதவர்கள். சிறிது படித்தவர்கள் ஒரு பெயரைப் படிப்பதற்குள் முழுவதும்ம ஓடி விடுகிறது. ஆகையால் இச்சங்கடத்தை நிவர்த்திக்கப் பட முதலாளிகள், பெயர்கள் காட்டப்படும் போது வாசிக்கப்படும் பின்னணிச் சங்கீதத்திற்குப் பதில் செய்திப் படங்களில் விபரம் கூறுவது போல் நடிக, நடிகைகளின் • பெயரைக் கூறினால் படிக்கத் தெரியாத பாமரர்களுக்கும், அரை குறை படிப்பாளிகளுக்கும் சௌகரியமாய் இருக்கும். • இதைப் பட முதலாளிகள் கவனிப்பார்களா?

எம். எம். சுந்தரம்,
சேங்காலிபுரம்.

கடவுள்கள் தப்புவர்!

ஒரு படத்தில் சிவனார் தாடி மீசையுடன் தோன்றுவார்! மற்றொரு படத்திலோ முழுக்க முழுக்க 'ஷேவிங்' செய்து வந்து நம் முன் நிற்பார்! ஒரு படத்தில் திருமால் (அதுதான் சார்! கிருஷ்ண பரமாத்மா) அசல் ஆணாக இருப்பார்! மற்றொரு படத்தில் அதே திருமால் பெண் உருவில் ('கிருஷ்ணி') காட்சி தருவார்! நல்ல வேளை! படைப்புக் கடவுள் பிரமாவுக்கு மட்டும், படவுலகில், பெண் ரூபத்தில் (அதாவது 'பிரும்மி') வரும் 'பாக்கியம்' கிடைக்க வில்லையென்றே நினைக்கிறேன்! இந்தப் பிரபல கடவுள்களான மும்மூர்த்திகளைத் தவிர, மற்றும் குட்டிக் கடவுள்களுக்கும், இக்கடவுள்களையெல்லாம் பூஜிக்கும் நாரதர் முதலான முனிபுங்கவர்களுக்கும் ஆபத்தைதான் அளித்தனர் நம் படவுலகப் 'பிரமாக்கள்''. இதுநாள் வரை இப்படிப் பார்க்கப் படு' கன்றுவி 'யாய்ருக்கும் காட்சிகளைப் பார்த்துப் 'பரவசப்' பட்டதற்கு, ஒரு முடிவு கட்ட நம் சென்னை சர்க்கார் முனைந்துள்ளதற்கு நம் நன்றி அவர்களுடைய திட்டம் ஆலோசனையிலிருந்து முடிவுக்கு வந்து விடும் என்று நம்புகிறேன். இதன் பயனாக நம் கடவுள்கள் தப்புவார்கள் என்றும் நம்புகிறேன்.

"அவினு,"
கூனூர்.

சிந்தித்து முடிவு செய்யுங்கள்

கடவுள்களை திரையில் காண்பிக்கக் கூடாதென ஒரு சட்டம் கொண்டு வரப் போவதாக சென்னை சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். மதத்தை இழிவு படுத்திக் காண்பிக்கும் எந்தப் படத்தையும் தடை செய்ய வேண்டுமென்பது ஒத்துக் கொள்ளக் கூடியதுதான். ஆனால் அதற்காக கடவுள்களைப் பற்றிய கதைகளையே எடுக்க முடியாது செய்து விடப் போகும் விபரீதச் சட்டம் அவசியந்தானா?

வேஷப் பொருத்தமற்ற நபர்களைக் கிருஷ்ணனாகவும், ராமனாகவும், சீதையாகவும், தமயந்தியாகவும் காண்பிப்பது சரியல்லதான். அதை நிவர்த்திக்க வேறு மார்க்கமே கிடையாதா?

கடவுள்களை சினிமாவில் காண்பிக்கக் கூடாதென்பதினால், எவ்வளவோ அருமையான கதைகளைப் படம் எடுகக முடியாது போய்விடும். இது ஈடு செய்ய முடியாத நஷ்டம். நாஸ்திகம் பரவி வரும் இந்நாட்களில் இச் சட்டம் வந்தால், தீமையை பயக்குமே அல்லாது நன்மை உண்டாகாது என்பது நிச்சயம். புராணமெனும் போர்வைக்குள் மதத்தை இழிவு படுத்தும் படங்களை தடை செய்வதே முதலாளிகளுக்குத் தகுந்த படிப்பினையாகும். அப்படிச் செய்யாமல் கடவுள்களைக் காண்பிக்கவே கூடாது என்றால், உண்மையாகவே நல்ல புராணப் படங்களைத் தயாரிக்க வேண்டுமென்று பாடுபடும் முதலாளிகளும் அதைக் கைவிட நேரிடும்.

ஆதலால் சர்க்கார் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருமுன் திர யோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஜனங்களின் சர்க்கார் இதைப் புறகணிக்காது என்றும் நம்புகிறேன்.

கே. வி. ஸ்ரீனிவாஸ் பி. ஏ.

கொழும்பு.

பம்பாயில் தமிழ்ப் படங்கள்

தமிழ்ப் படங்கள் இங்கு முக்கியமாக முறையே சிவோலி, சிட்டிலைட், பிராட்வே, கோஹினூர் ஆகிய நான்கு தியேட்டர்களில் காட்டப்பட்டு வருகின்றன. இத்தியேட்டர்கள் மாத்துங்கா, தாதர் என்னும் இடங்களில் இருக்கின்றன. பம்பாய் டவுனிலிருந்து தாதர் என்னுமிடம் ஏழு மைல் தூரத்திலும் மாத்துங்கா என்னுமிடம் எட்டு மைல் தூரத்திலும் இருக்கின்றது. மேற்படி இடங்களுக்குச் செல்ல வேண்டுமானால் பஸ், டிராமிலோ அல்லது எலக்டிரிக் டிரெயினிலோதான் செல்ல வேண்டும்.

தமிழ்ப் படங்கள் பெரும்பாலும் மேற்படி தியேட்டர்களில் காலை 9 அல்லது 9-30 மணிக்குக் காட்டப்பட்டு வருவதால், பம்பாய் டவுனில் வசிக்கும் தமிழர்கள் படங்களைப் பார்ப்பதற்கென்று காலை 6 மணிக்கே எழுந்து ஸ்நானபானாதிகளை முடித்துக் கொண்டு தியேட்டரை நோக்கிச் செல்ல வேண்டி வருகிறது. சமயத்திற்கு வண்டி கிடைக்கா. சில வேளை கஷ்டங்கள் ஏற்படுவதுமுண்டு. படம் முடிவதற்கு சுமார் ஒரு மணி ஆகும். பிறகு வண்டியைப் பிடித்து டவுனுக்குத் திரும்பும் போது மணி இரண்டு ஆகிவிடும். இதனால் ஹோட்டலில் சாப்பிடுகிறவர்கள் அன்று தம் சாப்பாட்டை இழக்க நேரிடும். ஆகவே தமிழ்ப் படங்கள் பார்க்க வேண்டுமானால் ஒன்று சாப்பாட்டை இழக்கத் தயாராய் இருக்க வேண்டும். இல்லை—சாப்பாடுதான் பெரிது என்றால் தமிழ்ப்பட ஆசையை அடியோடு மறந்து விட வேண்டும்.

இந்தக் கஷ்டத்தைத் தவிர்க்க, சம்பந்தப்பட்ட படம் தருவிப்பாளர்கள் டவுனிலே இருக்கும் தியேட்டர்களில் காட்ட ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். அப்படிச் செய்வதால் டவுன் வாசிகளின் நன்றிக்குப் பாத்திரமாவதோடு, "ஒரே கல்லில் இரண்டு மாங்காய்" என்பதற்கொப்ப இரண்டு இடங்களிலிருந்தும் அவர்களுக்கு நல்ல வசூல் கிடைக்கும். சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கவனிப்பார்களா?

க. சுந்தரம்.

பம்பாய்.

குற்றவாளி யார்?

எங்கள் ஊர் பாலஸ் டி வேல்ஸில் ஒரு புதுப்படம் பார்க்கச் சென்றிருந்தேன். மன அமைதியுடனும், ஆனந்தத்துடனும் படத்தை ரஸிக்க வேண்டிய நான் புழுக்கத்தின் மத்தியில் கஷ்டப்பட்டேன். காற்றோட்ட வசதி கடுகளவுமில்லாத அந்தக் கொட்டகையில் அளவுக்கு அதிகமான டிக்கட் கொடுத்து கொட்டகை நிரப்பப்பட்டது. சொல்பமான மின்சார விசிறிகளும் உயிரற்று மெதுவாகச் சுழன்றன.

புழுக்கத்தினால் என் அருகிலிருந்த அன்பர்களில் 7,8 பேர்கள் மூர்ச்சித்து விழுந்து விட்டனர். அவர்களை வெளியில் கொண்டு வந்து தண்ணீர் தெளித்து விசிறின பின்தான் உயிர் வந்தது. மக்களின் பணத்தால் வயிறு வளர்க்கும் கொட்டகை நிர்வாகஸ்தர்கள் மக்களுக்கு ஏன் சௌகரியம் செய்யக்கூடாது? காற்றோட்ட வசதி குறைந்த இடத்தில் ஏன் அதிக மக்களை அடைத்து கஷ்டப் படுத்துகிறார்கள்? பொது ஜனங்களுக்கு ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால் அதற்குப் பொறுப்பாளி சுகாதார அதிகாரிகளா? அல்லது கொட்டகை முதலாளியா?

இம்மாதிரி வசதி குறைந்துள்ள கொட்டகைகளை சர்க்கார் மூடச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் கொட்டகையையாவது சீர்திருத்தி அமைக்க செய்ய வேண்டும். இல்லையேல் மக்கள் சர்க்கார் என்று தாம் கூறிக் கொள்வது வீணாகவே போகும்.

செ. இராமலிங்கம்,

திருநெல்வேலி.

[குறிப்பு: இத்தியேட்டரைப் பற்றி நமக்கு அநேக கடிதங்கள் வந்திருக்கின்றன. நண்பர் சொல்லியிருக்கும் குறைகளையே அனைவரும் கூறி

பரிசு பெற்ற கடிதம்

★

எழுதியவர்:

எம். எம். சுந்தரம்,

இந்தியன் ஹோமியோ ஹால்

சேங்காலிபுரம், (த. ஜி.)

யிருக்கின்றனர். எல்லாக் கடிதங்களிலும்ஒரே கருத்தே இருப்பதால் அனைத்திற்கும் பிரதிநிதியாக இக்கடிதத்தை மட்டும் பிரசுரித்துள்ளோம். —ஆசிரியர்]

நிலைமை சீர் பட வேண்டும்

நவநாகரீக ஊர் என்று புகழப்படும் பினங்கில் இருக்கும் கொட்டகைகளில் ஒன்பதில் ஒரே கொட்டகையில் தான் தமிழ், ஹிந்துஸ்தானி படங்கள் திரையிடப் படுகின்றன. ஆனால் இந்த 9 கொட்டகைகளிலும் கீழ்த்தரமானதும் அனுகரிகம் நிறைந்ததுமான கொட்டகை இது ஒன்றுதான். தமிழ்ப்படத் தியேட்டர் போட்டி இல்லாத காரணத்தால் தானோ சம்பந்தப் பட்டவர்கள் இதை நாகரீகத்திற்குக் கொணர முடியவில்லை போலும்.

கொட்டகைகளில் ஐஸ் காற்று என்று சொல்லப்படும் ஒருவித மின்சார குளிர் காற்று ஒவ்வொரு கொட்டகையிலும் இயங்கும் இங்கு பழைய கர்நாடக விசிறிகளுக்கு இடமளிக்கப் படவில்லை. இதன் காரணமாக 'டிக்கட்' பெற்று உள்ளே வந்து உட்காரும் ரசிகர்களுக்கு ஆயாசத்தையும் புழுக்கத்தையும் அளிக்கிறது. போதாக்குறைக்கு மூன்றும் வகுப்பு ஆசனங்களின் பக்கத்தில் இரு புறங்களிலும் உள்ள அசுத்தத்தின் காரணமாக அவ்வழியே வரும் துர்நாற்றம் சகிக்க முடியாது. மேலும் அதே வகுப்பு ஆசனங்களின் அடியில் பரம்பரையாகக் குடி இருந்து வரும் மூட்டைப்பூச்சிகள் வேறு தங்கள் வேலையைத் தொடங்க ஆரம்பித்து விடுகின்றன.

தமிழன்பர்களுக்காக இக் கொட்டகைக்காரர்கள் தமிழ்ப் படங்களைத் தருவித்துக் காட்டுவதோடு கொட்டகையையும் நல்ல முறையில் திருத்தி அமைத்தால் நலமாக இருக்கும். ஜனங்களின் நலனைக் கருதும் ஒவ்வொருவரும் இதை வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

இக் கொட்டகைச் சொந்தக்காரர்கள் ஆவன செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஏ. எம். ஷேக் உதுமான்,
பினங்.

விலையைக் குறையுங்கள்

சினிமாவுக்குக் கட்டணம் கால் அணா அரையணாவென்று வரிமூலம் உயர்ந்து கொண்டே வருகிறது. இதனால் அடிக்கடி படம் பார்க்க முடியாமல் போகிறது. நான் குறிப்பிடுவது என் போன்ற சொல்ப சம்பாத்தியம் உள்ளவர்களைத் தான். அதுதான் அப்படி என்றால் பாட்டுப் புஸ்தகங்களின் விலையோ கட்டணத்தையும்விட அதிகமாக இருக்கிறது.

சாதாரணமாக சில கொட்டகைகளில் கடைசி வகுப்பு இரண்டேகால் அணாகூட இருக்கிறது. ஆனால் பாட்டுப் புத்தகங்களின் விலை ஒரு அணாவிலிருந்து இரண்டரையணா வரை இருக்கிறது. புத்தகத்தின் விலையை நோக்கும் போது பேசாமல் மற்றும் ஓர் முறை படத்தையே பார்த்து விடலாம் என்று தோன்றுகிறது. இதிலும் சங்கடம் இல்லாமலில்லை. படத்தை ஒரு முறைக்கு இரு முறை பார்த்தாலும், படத்தில் நடித்தவர்களின் பெயர்களை நினைவில் வைத்துக் கொள்ள பாட்டுப் புத்தகம் தேவை. இக்காரணத்தால் புத்தகத்தை வாங்க வேண்டி ஏற்படுகிறது. என் போன்ற ஏழைகளுக்குப் படம் பார்க்கவே காசு கிடைப்பது அரிதாக இருக்கும் போது, இவ்வளவு விலை கொடுத்து புஸ்தகம் வாங்குவது எப்படி?

"என் கணவர்" தமிழ் சமூகப் படத்தில் ராஜம்மாவும், கே. ஸ்ரீனிவாஸனும் வேடிக்கைத் தம்பதிகளாய் நடிக்கின்றனர்.

முன்பெல்லாம் பாட்டுப் புத்தகத்தின் விலை கால் அணா, அரையணாவாக இருந்தது. விலைவாசிகளின் உயர்வை முன்னிட்டு இப்பொழுது ஒரு அணாவாவது விலை வைக்கட்டும். இதிலும் அவர்களுக்கு லாபம் ஏற்படுமே யல்லாது நஷ்டம் உண்டாகாது.

படத் தயாரிப்பாளர்கள் ஏழைகளை மனதில் கொண்டு மலிவான விலையில் பாட்டுப் புத்தகங்களை வெளியிடுமாறு கோருகிறேன். இதை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்றும் நம்புகிறேன்.

ரதிமோஹன்,
மதுரை.

அப்பா! டூரிங் சினிமாக்களே!

இவ்வூரில் 8 சினிமாக் காட்சி சாலைகள் இருக்கின்றன. அதில் ஆறு டூரிங் சினிமாக்கள் ஆனால் அதற்கு வருஷக் கணக்காக நிரந்தர லைசென்ஸ் இருக்கும். இன்னும் 25 டூரிங் சினிமாக்கள் துவங்குவதாக இருந்தாலும் இவ்வூரில் லைசென்ஸ் கிடைக்கும்!

இவை அமைந்திருக்கும் இடங்களோ சாக்கடைத் தண்ணீர் ஓடும் வாய்க்கால்களின் ஓரத்திலும், புதுவை கோட்டை மேட்டின் ஓரத்திலும் தான். சுகாதாரம் என்பது இக்கொட்டகைகளின் அகராதியிலேயே இல்லை எனலாம்.

இது தான் இப்படி யென்றால், இந்தக் காட்சி சாலைகளில் குறித்த நேரத்தில் காட்சிகளைத் துவக்க மாட்டார்கள். நிரந்தர சினிமாக்களில் 2000 அடி படம் நடந்த பிறகு வசூலைப் பார்த்துக் கொண்டோ, அல்லது ஏதாவது கலவரம் நடக்குமென்று தெரிந்தாலோதான் துவக்குவார்கள்.

1000 பேர் உட்காரு மிடத்திற்கு 2000 பேர்களுக்கு மாத்திரம் டிக்கெட் கொடுத்து விட்டு நிறுத்தி விடுவார்கள். அவ்வளவு தயாள குணம் இவ்வூர் டூரிங் தியேட்டர்காரர்களுக்கு.

இவை எல்லாவற்றையும் விட மற்ற ஊர்களில் உள்ளதை விட இங்கு நூதன அம்சம் என்ன வென்றால், மிஷின் பழுதடைந்தாலும், கரண்ட் தவறினாலும் மழை பெய்தாலும் டிக்கட்டும் பணமும் வாபஸ் செய்யப்பட மாட்டாது என்ற ஸ்லைடு மாத்திரம் அடிக்கடி போடுவது தான்.

..இவ்வளவு அழகாகத் தியேட்டர்கள் நடத்தும் முதலாளிகளும், இதைக் கண்ணுற்றும் பேசா மடந்தையா யிருக்கும் சர்க்காரும், பொது ஜனம் என்று ஒன்று இருப்பதை மறந்து விடுகிறார்கள். ஜனங்களின் நலன்தான் தங்கள் நலன் என்று இவர்கள் மனதில் தோன்றினால் உடனே சகல செளகரியங்களையும் செய்து கொடுத்து விடுவார்கள். ஆனால் அது எங்கே இவர்களுக்குத் தோன்றப் போகிறது?

சாமி,
புதுச்சேரி.

சர்க்கார் ஆதரவு வேண்டும்

சென்னை சர்க்கார் டூரிங் டாக்கீஸ் சம்பந்தமாக சமீபத்தில் ஒரு அறிக்கை வெளியிட் டிருக்கிறார்கள். அதன்படி ஒரு டவுனிலோ அல்லது கிராமத்திலோ குறிப்பிட்ட இடத்தில் ஆறு மாதத்திற்கு மேல் டூரிங் சினிமாவுக்கு லைசென்ஸ் கொடுக்கக் கூடாது. அதற்குக் காரணம் என்ன சொல்கிறார்கள் என்றால், நிரந்தரத் தியேட்டருக்கும் டூரிங் தியேட்டருக்கும் போட்டி ஏற்பட்டு விடுமாம்.

பொதுவாகவே டூரிங் சினிமாக்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும் விஷயத்தில் சர்க்கார் கண்டிப்பாகவே இருந்து வருகின்றனர்.

இந்த சினிமாக்கள் (டூரிங்) தமிழ் நாட்டில் தான் அதிகம். மது விலக்கு ஏற்பட்ட பிறகு, பொதுவாக கிராம மக்கள் சினிமாவில் பொழுதைப் போக்குகின்றனர். மது அரக்கனிடமிருந்து விடுபட்ட ஏழைகள் குறைந்த செலவில் சினிமா பார்க்க, டூரிங் சினிமா வசதி அளிக்கிறது. அவர்கள் மனம் இந்த விதத்திலாவது திரும்பியது பற்றி நாம் சந்தோஷப்பட வேண்டியதுதான்.

உதாரணமாக நன்னிலம் டவுனில் எப்பொழுதாவது டூரிங் டாக்கீஸ் வந்து போகும். அதுவும் மிக சொற்ப காலத்துக்கே தான். மற்ற நாட்களில் சினிமாவுக்கென்று, எவ்வளவு தூரம் வெளியூர் செல்லவேண்டி யிருக்கிறது, தெரியுமா?

நன்னிலத்திலிருந்து மேற்கே கும்பகோணம் 18 மைல், வடக்கே மாயவரம் 18 மைல். கிழக்கே நாகப்பட்டினம் 24 மைல், தெற்கே திருவாரூர் 12 மைல். சினிமா பார்ப்பதற்கென்று ஏழை மக்கள் இவ்வளவு தூரம் போய் வர இயலுமா? அவர்கள் வருவாய்தான் இதற்கு இடம் தருமா?

நிரந்தர தியேட்டர்களை விட டூரிங் சினிமாவில் கட்டணம் மிகவும் குறைந்திருப்பதாலும், மது ஒழிக்கப்பட்டதால் மனதை வேறு வழியில் திருப்ப சினிமாவை அவர்கள் உபயோகித்துக் கொள்வதாலும் டூரிங் சினிமாக்களை சர்க்கார் அதிகம் ஆதரிக்க வேண்டும்.

என். வி. ராமசாமி,
அச்சுதமங்கலம்.

நுனிப்புல்



134114.
சென்னை-600 008

பாகவதர் ஒருவர் தமது கதா கால க்ஷேபத்தின் நடுவில், "முருங்கக் காய் சாப்பிடுகிறவர்கள் மோக்ஷத்திற் குப் போக முடியாது" என்று உருக்க மாக உபன்யாசம் செய்தார்.

• • •

வீட்டிற்கு வந்ததும், 'முருங்கக் காய் சாம்பார்' வைக்கும்படி மனை விக்கு உத்திரவு போட்டார் அந்த பாகவதர். அவருடைய மனைவி, அவர் கதா காலக்ஷேபத்தின் நடுவில் முருங்கக்காயைப் பற்றிப் பேசியதை குறிப்பிட்டுக் கேட்டாள். "அதெல் லாம் காலக்ஷேபத்திற்காகச் சொன்ன தல்லவா?" என்று பதிலளித்தாராம் பாகவதர்!

• • •

இந்தக் கதையை ஏன் சொல்ல வந் தேன் தெரியுமா? டைரெக்டர் சுப்ர மண்யம் சமீபத்தில் செய்த ஒரு காரி யம் மேற்குறிப்பிட்ட பாகவதரின் செய்கையையும் மிஞ்சிவிட்டது.

• • •

சென்ற ஜனவரி மாதம் 30-ம் தேதி காந்திஜீயின் சிரார்த்த தினம் அனுஷ்டிக்கப் பட்டது. தென்னிந்திய பிலிம் சேம்பரின் தலைவரான டைரெ க்டர் சுப்ரமண்யம், சென்னை நகரத்தி லுள்ள தியேட்டர்களை யெல்லாம் அன்று மூடிவிடும்படி ஒரு வேண்டு கோள் விடுத்தார். அப்படிச் செய்ய வேண்டியது நல்ல காரியம்தான்!

அன்று சென்னை நகரிலுள்ள தியேட் டர்கள் அனைத்தும் மூடப்பட்டன. அது சமயம் நகரத் தியேட்டர் ஒன் றில் காந்திஜீயின் டாக்குமென்டரி படம் நடைபெற்று வந்தது. அந்தப் படமும் அன்று நிறுத்தப்பட்டது.

• • •

தியேட்டர்கள் அனைத்தையும் மூடும் படி வேண்டிக் கொண்ட டைரெக் டர் சுப்ரமண்யம் தமது தயாரிப்பான கீத காந்தியின் பத்திரிகைக் காட் சியை அன்று ஏற்பாடு செய்ததை நினைக்கும் போதுதான் எனக்கு முத லில் குறிப்பிட்ட பாகவதருக்கும், சுப்ர மண்யத்திற்கும் வித்தியாசம் கண்டு பிடிக்கத் தெரியவில்லை.

• • •

இந்த 'பாகவதர் ஜாப்தா'வில் சேர்க் கப்பட வேண்டியவர்கள் நிறைய இருக்கிறார்கள். முக்கியமாக அடிக் கட்டுப்பாடு விஷயமாக தீவிரவாதம் செய்து வரும் சிலரைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

• • •

சென்ற யுத்தம் நடந்த சமயத்தில் 'சினிமாப் படங்களின் நீள அடிக் கட்டுப்பாடு' முதன் முறையாக அமு லுக்கு வந்ததல்லவா? அதை ஆதரித் தும், எதிர்த்தும் வாதப்பிரதிவாதங் கள் பலமாக நடைபெற்றன. 'அடிக் கட்டுப்பாடு அவசியம்' என்று பல பட முதலாளிகள் கூட ஆதரித்துப் பேசி னார்கள்.

சிறிது காலத்திற்குப் பிறகு அடிக்கட்டுப்பாடு நீங்கியது. அடிக்கட்டுப்பாடு வேண்டுமென்று ஆமோதித்துப் பேசிய படமுதலாளிகளே பத்தொன்பதாயிரம் அடிகளுக்கும் மேற்பட்ட படங்களைத் தயாரித்துவெளியிட்டார்களென்றால் அதற்கு என்ன சொல்வது?

• • •

அதே மாதிரி தான் இன்னொரு உதாரணமும். அடிக் கட்டுப்பாட்டிற்கு 'சபாஷ்' போட்டு பத்தி பத்தியாக எழுதினார் ஒரு பத்திரிகாசிரியர். தாம் பிற்பாடு ஒரு பட முதலாளியாகக் கூடுமென அவர் அப்பொழுது எதிர்பார்க்கவேயில்லை.

• • •

பிற்பாடு அந்தப் பத்திரிகாசிரியர் ஒரு படத்தைத் தயாரிக்க முன் வந்தார். படம் இன்னும் தயாராகி முடிவடையவில்லை. அந்தப் பத்திரிகாசிரியர் இப்பொழுது, அடிக் கட்டுப்பாடு கூடாதென்றும், அதிக நீளம் தேவை என்றும் தீவிரமாய் வாதித்துவருகிறார்!

• • •

'தலைவலியும், காய்ச்சலும் தனக்கு வந்தால் தான் தெரியும்' என்று சொல்லுவார்களே; அது எவ்வளவு உண்மையாக இருக்கிறது பாருங்கள்!

• • •

இது வரையில் பல படங்களின் பத்திரிகைக் காட்சிகளுக்கு நான் போயிருக்கிறேன். சில பட முதலாளிகள் வயிறு நிறைய டிபன், காப்பி கொடுத்து அனுப்புவார்கள். சிலர் தாகத்துக்கு மட்டும் கொடுத்து அனுப்புவார்கள். மூன்றரை மணி நேரம் கொட்

டகைக்குள்ளேயே அடைத்து வைத்து எதுவும் கொடுக்காமலே அனுப்பி விடும் புண்ணியவான்களும் உண்டு.

• • •

டைரெக்டர் சுப்ரமண்யம் அடிக்கடி புதுமையாக ஏதேனும் செய்யக் கூடியவர். காந்திஜியின் சிரார்த்த தினத்தன்று அவரது கீத காந்தி பத்திரிகைக் காட்சிக்கு வந்திருந்தவர்களுக் கெல்லாம் அவர் அப்பம், வடை, எள்ளுருண்டை முதலியவைகளை வழங்கினார்!

• • •

சென்னை நகரில் ஒரு சமயம் கிடைக்காத அரிய பொருளாக இருந்தது அரிசி 'இட்லி'. அப்படிப்பட்ட சமயத்தில் நடைபெற்ற பத்திரிகைக் காட்சி ஒன்றில், வந்திருந்தவர்களுக்கு அந்தப் படத்தின் முதலாளி அருமையான அரிசி இட்லி கொடுத்தார். அவருடைய படம் நன்றாயிருக்கவில்லை எனினும், அவர் கொடுத்த இட்லி பிரமாதமாக இருந்தது!

• • •

இதையெல்லாம் நினைக்கும் போது சென்னையில் கொஞ்ச காலம் நடந்து வந்த 'இலக்கியக் கூட்டங்கள்' நினைவுக்கு வருகின்றது. "வந்த அன்று வாழை இலை......நான்காம் நாள் அதுவும் இல்லை..." என்ற ரீதியில் தான் முடிந்தது இக் கூட்டத்தின் கதியும்.

• • •

ஜூபிடர் பிக்சர்ஸ் கட்டிடத்தில், கதாசிரியரும் டைரெக்டருமான பி. எஸ். ராமையாவின் அழைப்பிற்கிணங்க பிரமாதமான விருந்துடன் ஆரம்பித்தது கூட்டம். படிப்படியாக டிபன், காப்பி, வெறும் காப்பி, கடைசியில் அதுவும் இல்லை என்று குறைந்து கொண்டே வந்து, கூட்டம் ஒன்று நடந்ததையே எழுத்தாளர்கள் இப்பொழுது மறந்தும் விட்டார்கள்!

நம்ப புளிமூட்டை நாரதர் வேஷத்தைக் கூடப் பாக்கி வைக்கவில்லை. அதையும் "நல்லதம்பி"யில் போட்டுப் பார்த்துவிட்டார்.

தியேட்டர்கள் மூடப்பட்டன

விஜயவாடா பிராந்தியங்களில் இப்பொழுது அம்மை அதிகமாயிருப்பதால் அதைப் பரவாமல் தடுப்பதற்காக, விஜயவாடாவிலுள்ள தியேட்டர்களையும், பொது ஜனங்கள் கூடும் இதர இடங்களையும் இம் மாதம் 9-ந் தேதி முதல் 15 நாட்களுக்கு மூடிவைக்கும்படி விஜயவாடா முனிசிபல் கமிஷனர் உத்திரவிட்டிருக்கிறார்.

ஸ்திரீ அங்கத்தினர்கள்

சென்னை சட்ட சபையின் ஸ்திரீ அங்கத்தினர்களில் இருவர் படத்தணிக்கை போர்டில் அங்கத்தினராய் நியமிக்கப் படலாமெனத் தெரிகிறது.

குப்புசாமி ஒரு மளிகை வியாபாரி; பெரிய பணக்காரர். மேன்மேலும் பணம் குவிப்பது ஒன்றுதான் அவரது ஆசை. யுத்த காலத்தில் கோவிந்தன் என்பவனைக் கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டு கள்ள மார்க்கெட் வியாபாரம் செய்து கொள்ளை லாபம் அடைகிறார். கோவிந்தனோ குப்புசாமியின் பொன் மீதும், பெண் (விநோதினி) மீதும் ஏக காலத்தில் கண் வைத்துவந்தான். இரண்டையும் சேர்ந்தாற் போல் அடைவதற்காக அவன் பல சூழ்ச்சிகளைச் செய்து வந்தான்.

விநோதினி தாயில்லாப் பெண். தகப்பனால் மிகச் செல்வமாய் வளர்க்கப்பட்டு வந்தாள். ஒரு நாள் அவள் மோட்டாரில் கடைக்குப் போய்விட்டுத் திரும்புகையில், அவளை கோவிந்தனின் ஆட்கள் இடை மறித்துத் தூக்கிச் செல்லுகிறார்கள். விநோதினி போட்ட கூச்சலைக் கேட்ட துப்பறியும் சுந்தரம் அவ்விடம் வந்து தன் ஆட்களுடன் கோவிந்தனின் ஆட்களைத் துரத்திச் சென்று விநோதினியைக் காப்பாற்றி வீட்டிற்கு அழைத்து வருகிறார். இருவருக்கும் அது முதல் காதல் ஆரம்பமாகிறது.

சபாபதி என்பவர் குப்புசாமியின் நண்பர். தனவந்தர். அவருக்கு விநோதினியை மணம் முடித்து வைக்கத் தீர்மானிக்கிறார் குப்புசாமி. இதற்கிடையில் சபாபதி தம் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக ஒரு சிற்றுண்டி விருந்தை நடத்துகிறார். விருந்திற்கு குப்புசாமி விநோதினியையும், சுந்தரையும் அழைத்துக் கொண்டு வருகிறார். சபாபதி அவர்களை மிக அன்புடன் வரவேற்கிறார். இது கோவிந்தனுக்குப் பொறுக்கவில்லை.

குப்புசாமியும், சபாபதியும் தோட்டத்திற்குச் சென்று விநோதினியை சபாபதிக்கு மணம் செய்து வைப்பது சம்பந்தமாய் பேசுகின்றனர். இதை மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த கோவிந்தனின் ஆத்திரம் எல்லை மீறியது. அவன் அவ்விடம் விட்டு, விநோதினி பாடிக் கொண்டிருந்த இடத்தை அடைகிறான். இடையில் அவன் கை தட்டி அக் கச்சேரியை நடைபெறாமல் செய்கிறான். இதன் விளைவாக சுந்தரத்திற்கும் கோவிந்தனுக்கும் இடையே வாக்குவாதம் பலக்கிறது. சத்தத்தைக் கேட்டு குப்புசாமியும், சபாபதியும்கூட அங்கு வருகிறார்கள். கோவிந்தனை வெளியே போகும்படி விநோதினி உத்தரவிடுகிறாள். கோவிந்தன் "எப்படியும் அவளை மணந்தே தீருவது" என்ற சபதத்துடன் வெளியே போகிறான்.

விநோதினியை தான் மணந்து கொள்ளும் விஷயத்தில் சபாபதி போட்டியாயிருப்பார் என்றறிந்த கோவிந்தன் அவரை ஒழிப்பதற்கு முயலுகிறான். சபாபதியின் வீட்டில் அவருக்குத் தெரியாமல் நெல் மூட்டைகளை அடுக்கச் செய்துவிட்டு, கோவிந்தன் போலீஸுக்குத் தெரிவித்து விடுகிறான். போலீஸார் சபாபதியைக் கைது செய்கின்றனர். குப்புசாமி அவருக்கு ஜாமீன்கொடுத்து மீட்கிறார்.



விநோதினி

விருந்திற்குப் பின் சுந்தர், விநோதினி இவர்களிடையே காதல் வளர்கிறது. இருவரும் ஒருநாள் சந்தோஷமாய் இருப்பதை குப்புசாமியும், சபாபதியும் பார்க்கின்றனர். உடனே குப்புசாமி மிகுந்த கோபம் அடைந்து சுந்தரின் கன்னத்தில் ஒரு அறை கொடுக்கிறார். விநோதினியை சபாபதிக்கு மணம் செய்து வைக்க முன்பே தாம் தீர்மானித்திருப்பதாக அவளிடம் குப்பு

சாமி கூறுகிறார். விநோதினி சபாபதியை மணக்க மறுக்கிறாள். ஆனால் குப்புசாமி ஒரே பிடிவாதமா யிருக்கிறார். விநோதினி தன் வேலைக்காரி பாஞ்சாலி மூலம் சுந்தருக்கு இந்த விஷயங்களைச் சொல்லி, இதற்கு ஏதேனும் வழி செய்யும்படியும் சொல்லி அனுப்புகிறாள்.

இதற்கிடையில் சுந்தரின் கிடங்கில் யாரோ சிலர் புகுந்து நெல் மூட்டைகளை கடத்திக் கொண்டு போவதாக சுந்தருக்குச் செய்தி எட்டுகிறது. சுந்தர் கிடங்கிற்கு விரைந்து செல்கிறான். கிடங்கில் புகுந்திருந்த கோவிந்தனின் ஆட்கள் சுந்தரைக் கட்டிக் கொண்டு போகிறார்கள்.

பாஞ்சாலி சுந்தரின் வீட்டை அடைந்ததும் அவளுக்கு விஷயம் தெரிகிறது. இதற்கெல்லாம் கோவிந்தன் தான் காரணமாய் இருக்க வேண்டுமென்று யூகிக்கிறாள். எப்படியும் சுந்தரை விடுவிக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறாள். அதற்கிணங்க அவளும், சேது, நாகு ஆகியவர்களும் நாட்டிய மாதர்களாய் வேஷம் போட்டுக் கொண்டு கோவிந்தனின் வீட்டிற்குப் போகின்றனர். அவர்கள் தந்திரமாக கோவிந்தனின் ஆட்களை ஏமாற்றிவிட்டு அவனுடைய வீட்டிற்குள் சென்று சுந்தரைச் சந்திக்கின்றனர். எல்லோரும் வெளியேறுவதற்கு முயற்சிக்கின்றனர். அதற்குள் எங்கிருந்தோ கோவிந்தன் அங்கு தோன்றுகிறான். ஒரு கடும் சண்டை ஆரம்பமாகிறது. முடிவில் அவர்கள் தந்திரமாய் வெளி

யேறுகின்றனர். சுந்தரைக் காணச் சென்ற பாஞ்சாலி திரும்பி வராததாலும், தகப்பனார் ஒரு பக்கம் சபாபதியை மணந்து கொள்ளும்படி அவளை வற்புறுத்தியதாலும் விநோதினி என்னசெய்வதென்று தோன்றாமல் தவித்தாள்.

சபாபதி—விநோதினி திருமணத்திற்கான நிச்சியதார்த்தத்திற்கு குப்புசாமி ஏற்பாடு செய்கிறார். விநோதினி வாழ்க்கையில் வெறுப்புக் கொள்கிறாள். விஷம் அருந்தி உயிரை விட்டுவிடவும் அவள் முயலுகிறாள். ஆனால் அங்கு கோவிந்தன் திடீரென்று தோன்றி அவளைத் தடுத்து, தூக்கிக் கொண்டு போக முயல்கிறான். விநோதினி கூச்சலிடுகிறாள். கூச்சலைக் கேட்ட குப்புசாமியும், சபாபதியும் அவ்விடம் ஓடி வருகின்றனர். கோவிந்தன் சுட்ட குண்டு சபாபதியை வீழ்த்துகிறது. கோவிந்தன் விநோதினியுடன் வெளியேறுகிறான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பாஞ்சாலியும் சுந்தரும் அங்கு வருகிறார்கள். கோவிந்தன் விநோதினியைத் தூக்கிச் சென்று விட்டதையும், சபாபதி படுகாயம் அடைந்திருப்பதையும் அவர்கள் பார்க்கின்றனர். குப்புசாமி தம் தவறை உணர்ந்து வருந்தி, விநோதினியை சுந்தருக்கே கல்யாணம் செய்து வைப்பதாய் தீர்மானித்து விடுகிறார். எப்படியாவது தன்மகளைக் காப்பாற்றும்படி சுந்தரிடம் வேண்டுகிறார்.

போலீஸாரை அழைத்து வரும்படி குப்புசாமியிடம் கூறிவிட்டு, சுந்தர், சேது, நாகு ஆகியோருடன் கோவிந்தனின் ரகஸிய விடுதிக்கு விரைகிறான். அங்கு கோவிந்தனுடைய ஆட்களுடன் சுந்தர் கோஷ்டியினர் கடும் சண்டை செய்கின்றனர். முடிவில் சுந்தர் தோற்றுப் போனதால் கைது செய்யப் படுகிறான். ஆனால் அந்த சமயத்தில் குப்புசாமி போலீஸாருடன் அங்கு வருகிறார்.

கோவிந்தன் குப்புசாமியைச் சுட்டு வீழ்த்துகிறான். போலீஸார் கோவிந்தனையும் அவனது ஆட்களையும் கைது செய்து விட்டு, சுந்தர், விநோதினி முதலியோரை விடுவிக்கின்றனர்.

குண்டு காயம் பட்ட குப்புசாமி குணம் !அடைந்து விடுகிறார். பிறகு விநோதினிக்கும் சுந்தருக்கும் கோலாகலமாய் திருமணம் நடைபெறுகிறது.

உங்களதிர்ஷ்டத்தில் எழுதி இருப்பதென்ன?

நீங்கள் ஒரு வருஷத்திற்குள் நடக்கும் சுபா சுபங்களை அறிந்துகொள்ள வேண்டுமெனில், இன்றே ஒரு கார்டில் உங்களுடைய விலாசம், ஒரு புஷ்பத்தின் பெயர் எழுதியனுப்புங்கள். நாங்கள் ஜோதிஷ சாஸ்திர கணிதப்படி உங்களுக்கு உண்டாகும் லாபகஷ்டங்கள் எந்த வியாபாரத்தால் லாபம் கிடைக்கும், எங்ஙனம் பொருள் சேரும், உத்தியோகம் எப்போது கிடைக்கும், வேலை ஆட்களுடைய அபிவிருத்தி, தம்பதிகளுடைய சௌக்கியம், ஆரோக்கியம், வியாதி, தூரப் பிரயாணங்கள், வியாஜ்ஜியம் அல்லது பரீக்ஷைகளில் தேர்ச்சி, கல்யாணம், பூமி அல்லது ஆஸ்தியினால் சுகம், புதிய நட்பு; உங்கள் கார்டு சேர்ந்தவுடனே மாதவாரி பலனும் வருட பலனும் ரூ. 1-4-0க்கு தபாலில் V.P.யில் அனுப்புகிறோம். தபால் செலவு வேறு; துரதிர்ஷ்டத்தை அதிர்ஷ்டமாக்கிக் கொள்ளவும் வழியுண்டு ; எழுதி அனுப்புகிறோம். இதனால் வரப்போகும் கஷ்டங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஒரு முறை பரீக்ஷித்தாலே தெரியும். உங்கள் ஜாதக பலன்களின் திண்மையை தப்பென்று ருஜு செய்தால் கட்டிய பணம் வாபீஸ் செய்யப்படும்.

SHRI SWAMI SATNARAIN JOTISH ASHRAM

(G.D.M.) HOSHIARPUR.

இசைச் செய்தி

அடிக் கட்டுப்பாடு சலுகை

சென்னை சர்க்கார் விதித்துள்ள சினிமாப் பட நீளக் கட்டுப்பாடு விஷயத்தில் சில படங்களுக்கு சலுகை காட்ட முன் வந்திருக்கின்றனர். 'சென்ற வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்கு முன் குறைந்தது 15 தினங்களாவது படப் பிடிப்பு நடந்துள்ள படங்களெல்லாம் 15,500 அடி நீளம் இருக்கலாம்' என்பதே இந்தச் சலுகை. ஆனால் அந்தப் படங்களெல்லாம் 1949-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 31-ந் தேதிக்குள் தணிக்கைக்கு வந்து விடவேண்டும். இந்தச் சலுகையைப் பெற விரும்புகிறவர்கள் ஏப்ரல் மாதம் 1-ந் தேதிக்கு முன்பே மனுச் செய்து கொள்ள வேண்டுமாம்.

அக்ஷராப்பியாசம்

நாட்கம், சினிமா, சங்கீதம், நாட்டியம் ஆகிய பல கலைகளிலும் உள்ள அநேகரும், அத்துடன் பத்திரிகாசிரியர்கள் பலரும் ஒரு விசேஷத்திற்கு விஜயம் செய்வது என்பது அதிசயம்தான். இந்த அதிசயம் நடக்கக் காரணமாக இருந்தார்கள் இரண்டு பாலர்கள்.

சென்ற மாதம் 24-ந் தேதி, "நாரதர்" பத்திரிகையின் பொறுப்பாசிரியர் ஸ்ரீ. டி. ஸ்ரீனிவாஸ ராவ் தமது ஒரு மகனை சாரங்கராஜ குமாரனுக்கு அக்ஷராப்பியாசமும், மற்றொரு குமாரனை நாகராஜ குமாரனுக்கு அப்த பூர்த்தியும் நடத்தி வைத்தார்.

இது சம்பந்தமாக அன்று மாலை வாணி மஹாலில் அவர் ஒரு விருந்து ஏற்படுத்தியிருந்தார். அதற்குத்தான் மேற் குறிப்பிட்ட துறையிலுள்ள கலைஞர்களும், மந்திரி, மேயர் முதலிய பிரமுகர்களும் வந்து பாலர்களை ஆசீர்வதித்து பல பரிசுகளை வழங்கினார்கள். கூடியிருந்தவர்களை குளிக்கரை பிச்சையப்பா பிள்ளை தமது நாதஸ்வர கீதத்தாலும், நாட்டிய சகோதரிகளான லலிதா—பத்மினி ஆகியோர் தம் அற்புதமான ஆட்டத்தாலும் மகிழ்வித்தனர்.

இந்த இரு பாலர்களுக்கும் எமது மனமார்ந்த ஆசிகள்.

அலகாபாத்தில் தடை

அலகாபாத் அடிஷனல் ஜில்லா மாஜிஸ்டிரேட், 'நடு இரவுக்குப் பின்னர் சினிமாக் காட்சிகள் நடைபெறக் கூடாதெ'ன ஒரு உத்திரவு பிறப்பித்துள்ளார். பொது ஜனங்களின் தேகாரோக்கியத்தை முன்னிட்டுத்தான் இந்த உத்திரவு விதிக்கப் பட்டுள்ளதாம்.

நடிகைமீது வழக்கு

'தனக்குச் சொந்தமான பல ஆயிரம் ரூபாய்கள் பெறுமானமுள்ள நகைகள், பாத்திரங்கள் முதலியவைகளைக் கொள்ளை அடித்துக் கொண்டு போனதாக' பிரபல சினிமா நடிகை மாதுரி தேவி மீது, அவருடைய தாயார் சென்ற மாதம் 19-ந் தேதி சென்னை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒரு வழக்குத் தொடர்ந்தார். மாஜிஸ்டிரேட், இம்மாதிரியான வழக்கை தான் விசாரிக்க முடியாதென்றும், 'சிவில்' கோர்ட்டில் வழக்கைப் பதிவு செய்து கொள்ளும்படியும் கூறி, வழக்கைத் தள்ளி விட்டார்.

படங்களில் தெய்வங்கள்

இம் மாதம் 9-ந் தேதி நடைபெற்ற மேல் சபைக் கூட்டத்தில், கல்வி மந்திரி சினிமாக்களில் ஹிந்து தெய்வங்கள் காட்டப்படுவது பற்றி குறிப்பிட்

டார். ஹிந்து தெய்வங்கள் போன்ற புராண கதாபாத்திரங்களை ஜனங்களுக்கு பக்தி ஏற்படக்கூடிய ரீதியில் காட்டலாமேதவிர பரிகாசம் செய்யக்கூடிய முறையில் காட்டக்கூடாது என தணிக்கை விதிகள் இருப்பதாகவும், அந்த விதிகளை சர்க்கார் பொதுப் படையில் அங்கீகரித்து இருப்பதாகவும் அவர் கூறினார். எந்த நாட்டுப் படங்களாக இருந்தாலும் எல்லாப் படங்களுக்கும் தணிக்கை விதிகளை சர்க்கார் பிரயோகிக்க உத்தேசித்திருப்பதையும் அவர் கூறினார். மேலும் சினிமாச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமானால் இந்திய சர்க்காரைக் கலந்து ஆலோசிப்பது அவசியம் என்றும் அவர் சொன்னார்.

தியேட்டரில் தீ விபத்து

இம் மாதம் 8-ந் தேதி மருவிப்பட்டினத்திலுள்ள மினர்வா டாக்கீஸில் ஒரு தீ விபத்து ஏற்பட்டது. ஒரு லக்ஷம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்று தெரிகிறது.

கே. பி. எஸ். நாடக சபா

பிரபல நடிகை ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் சொந்தத்தில் ஒரு நாடக சபாவை ஆரம்பித்து நடத்தப் போவதாகத் தெரிகிறது. அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

சம்பாஷணை இரவல்

ஜூபிடர் பிக்சர்ஸின் கன்னியின் காதலியில் மாதுரி தேவி ஆணாகவும் பெண்ணாகவும் இரு பாத்திரங்களில் நடிக்கிறார். அவர் ஆணாகத் தோன்றும் கட்டங்களில் அவருக்கான சம்பாஷணைகளை, மிஸ். மாலினியில் நடித்த கோபால கிருஷ்ணன் என்ற இளைஞன் பேசி வருகிறானாம்.

ஜெமினியில் வைஜயந்தி

ஜெமினிஸ்டுடியோஸார் தயாரிக்கப் போகும் காந்திமதியில் (கார்ஸிகன் பிரதர்ஸ்) பிரதம பாகத்தில் வசுந்தரா தேவியின் மகள் வைஜயந்தி மாலா நடிக்கக் கூடுமாம்.

'நிர்மலா' நாடகம்

திருமயிலை என். எஸ். பி. ஜி. சபையார் சென்ற மாதம் 3-ந் தேதியன்று சென்னை செயின்ட் மேரீஸ் ஹாலில் "நிர்மலா" என்ற தமிழ் நாடகத்தை நடித்துக் காட்டினர். இந்த நாடகத்தில் பேபி வசந்தா நாட்டியம் ஆடினாள். மற்றும் மோஹனபாய், ராஜம்மாள், பி. விஸ்வா, எஸ். பி. நடேசன், பி. எஸ். என். ராவ் முதலியோர் பங்கெடுத்துக் கொண்டனர்.

சினிமா ரஸிகர்கள் சங்கம்

சென்னையில் ஒரு வருஷ காலத்திற்கு முன் ஆரம்பிக்கப்பட்ட சினிமா ரஸிகர்கள் சங்கம் விக்னமின்றி முதல் வருஷத்தைக் கடந்து, முதல் ஆண்டு விழாவை கனம் மந்திரி எம். பக்தவத்ஸலம் அவர்களின் தலைமையில் ராஜாஜி ஹாலில் இம் மாதம் 9-ந் தேதியன்று கொண்டாடியது.

ஸ்ரீ. வி. ஸி. கோபால ரத்னம் மந்திரியை வரவேற்றுப் பேசுகையில், இச் சங்கத்தை சர்க்கார் சீக்கிரமே அங்கீகரிக்க வேண்டு மென்றும், இச் சங்கத்திற்கு தணிக்கை போர்டில் ஒரு ஸ்தானம் அளிக்க வேண்டுமென்றும், சர்க்கார் லளித கலை வளர்ச்சியைக் கவனிப்பதற்காக தனி இலாகாவை ஏற்படுத்த வேண்டுமென்றும், தியேட்டர்களுக்குள் புகை பிடிப்பதைத் தடை செய்ய வேண்டுமென்றும் கூறினார்.

கனம் மந்திரி பேசுகையில், "நம் தேச ஆட்சியில் நமக்கு உரித்தான பங்கை நாம் பெற வேண்டும். ஆதலால் நாம் ஓரளவு ஹிந்துஸ்தானியைக் கற்றுக் கொள்ளுவது அவசியம். எனவே இந்திய தேசிய பாஷையைப் பரப்புவதற்காக இங்குள்ள தியேட்டர்கள் அதிகமான ஹிந்திப் படங்களைக் காட்ட வேண்டும்"— என்று குறிப்பிட்டார். பிறகு அவர்

சினிமாவின் சக்தியைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, சமீபகாலமாக தமிழ்ப் படங்கள் முன்னேறி வருவதாகவும், படமுதலாளிகள் ஆபாசமான காட்சிகளைப் படங்களில் புகுத்துவதை அடியோடு நிறுத்த வேண்டுமென்றும் கூறினர்.

இந்தியாவுக்கு வருவார்

பிரபல அமெரிக்க நீக்ரோ பாடகரும், நீக்ரோக்களின் முன்னேற்றத்திற்கும் உரிமைகளுக்கும் தீவிரமாய் போராடி வருபவருமான பால் ராப்ஸன் ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்வார். அவர் இப்பொழுது மேனடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிருர்.

கிருஷ்ணன் பறந்தார்

கருடன் பறந்ததை நான் குறிப்பிடவில்லை! நம் என். எஸ். கிருஷ்ணன் இம் மாதம் 11-ந் தேதி இலங்கைக்குப் பறந்து சென்று விட்டு வந்தாரே அதைக் குறிப்பிடுகிறேன். கொழும்புவில் தமிழ் யூனியன் கிரிக்கெட் கிளப் என்று ஒரு சங்கம் இருக்கிறது. அதற்கு கட்டட நிதி வசூலித்துக் கொடுப்பதற்காகவே என். எஸ். கே., மதுரம் கோஷ்டியினர் ஒரு பிரத்தியேக விமானத்தை அமர்த்திக் கொண்டு சென்றனர். கொழும்பு 'ஓவல் கிரௌண்டில்' இம் மாத 12-ந் தேதி அவர்கள் கிந்தனர் காலக்ஷேபம், இந்திர சபா முதலியவைகளை நடத்தினர். வசூலான தொகையை அச் சங்கத்திற்குக் கொடுத்து விட்டு வந்தனர். என். எஸ். கே., மதுரம் இவர்களின் வர்ண சித்திரம் ஒன்று மேற்படி சங்கத்தில் திறந்து வைக்கப் பட்டது.

ஒன்று சேர்ந்தனர்

தனித்தனியாக காகிதம், உலோகங்கள் முதலியவற்றில் வியாபாரம் நடத்திவந்த ஸ்ரீமான்கள் பி. எஸ்.



நிருத்திய சாம்ராட் கோபாலகிருஷ்ண பிரபல கலையன்பர் ஸ்ரீ. எப். ஜி. நடேசய்யருக்கு சமீபத்தில் டில்லியில் ஒரு விருந்தளித்தார்.

ஜூபிடர் பிக்சர்ஸ் "வேலைக்காரி" யில் வக்கீல் வேஷத்தில் கே. ஆர். ராமசாமி.

என். எம். சிதம்பரம் செட்டியார், பி. எஸ். என். எஸ். அம்பலவாண செட்டியார், பி எஸ். என். எம். ராமலிங்கம் செட்டியார், வி. தைவண்ண செட்டியார் ஆகிய ஐந்து சொந்தக்காரர்களும் இப்பொழுது ஒன்றுகூடி பி. எஸ். என். எஸ். அம்பலவாண செட்டியார் அண்ட் கோ என்ற லிமிடெட் கம்பெனியை ஸ்தாபித்திருக்கின்றனர். இக் கம்பெனியின் ஆரம்ப விழா இம் மாதம் 7-ந் தேதி யன்று சென்னை தங்கசாலைத் தெருவிலுள்ள அதன் காரியாலயத்தில் நடைபெற்றது.

ஆண்டு நிறைவு

சமீப காலம் வரை ஏவி. எம். கம்பெனியில் மேனேஜரா யிருந்து வந்த ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி தம் இரண்டாவது புத்திரனை சி. ராமச்சந்திரனின் ஆண்டு நிறைவு விழாவை இம் மாதம் 5-ந் தேதியன்று கொண்டாடினர். சினிமாப் பிரமுகர்கள் பலர் விஜயம் செய்து குழந்தையை ஆசிர்வதித்தனர்.

உபநயனம்

நடிகர் - டைரெக்டர் கொத்தமங்கலம் சுப்பு தம் புத்திரர்களான மஹாலிங்கம், விஸ்வநாதன், தம்பி சிவராமன் ஆகியோருக்கு இம் மாதம் 10-ந் தேதியன்று மைலாப்பூரில் உபநயன வைபவத்தை தடபுடலாக நடத்திவைத்தார். இதையொட்டி அவர் 13-ந் தேதி யன்று ஜெமினி ஸ்டுடியோவில் ஒரு தேநீர் விருந்தை அளித்தார். அச்சமயம் ஆலத்தூர் சகோதரர்களின் கச்சேரியும் நடந்தது

ஜெட் என்ஜினீயர் சினிமா நடிகராகிறார்

ஜெட் எஞ்ஜினை கண்டு பிடித்த ஏர்-கம்மோடர் ஸர். பிராங்க் விட்டில் ஒரு சினிமாப் படத்தில் நடிக்கப் போகிறார். பிரிட்டிஷ் சப்ளை மந்திரி காரியாலயத்தின் ஆதரவில் தயாரிக்கப்படும் இப் படம் அவருடைய புதிய எஞ்ஜினைப் பற்றியும், வருங்காலத்தில் அது எவ்விதமான வேலைகளைச் செய்யுமென்பதைப்பற்றியும் சித்தரிக்கும்.

'வாழ்க்கை'யில் திரௌபதி

ஏவி. எம். தயாரித்து வரும் வாழ்க்கையில் ஒரு முக்கியமான பாத்திரத்தில் நடிக்க டி. கே. எஸ். பிரதர்ஸைச் சேர்ந்த எம். எஸ். திரௌபதி ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

ஜெமினியில் தெலுங்குப் படம்

ஜெமினி ஸ்டுடியோக்காரர்கள் தெலுங்குப் படம் ஒன்றைத் தயாரிக்க திட்டமிட்டிருக்கின்றனர். படத்தை புல்லையா டைரெக்ட் செய்வாரென்றும், பிரதம பாகத்தில் புஷ்பவல்லி நடிப்பாரென்று தெரிகிறது.

சபாஷ், மெய்யப்பன்!

கவிச்சக்ரவர்த்தி சுப்ரமண்ய பாரதியாரின் பாடல்களை இதுவரை தமது ஏகபோக உரிமையாக வைத்திருந்தார், ஸ்ரீ. ஏவி. மெய்யப்பன், பிரதமர் ஸ்ரீ. ஓமந்தூர் ராமசுவாமி ரெட்டியாரின் வேண்டுகோளுக்கு இணங்க அவர் தமது உரிமைகளை இலவசமாக சென்னை சர்க்காருக்கு மாற்றிவிட்டார்.

சென்னையில் இரு நல்ல நாடகங்கள்

தமிழ் நாட்டில் நன்கு நடிக்கக் கூடியவர்களுக்குக் குறைவேயில்லை. ஆனால் நடிக்கக் கூடிய அநேகருக்கு ஆதரவு அளித்து, உற்சாகமூட்டி, பயன்படுத்துபவர்தான் இங்கு மிகக் குறைவு; ஆதலால்தான் விஷயந் தெரியாத சிலர், "ஆந்திரர்களைப் பார்; வடக்கத்தியரைப் பார்; அவர்களெல்லாம் எவ்வளவு ஜோராய் நடிக்கிறார்கள்" என்று கூறிக் கொண்டிருப்பதற்கு இடம் ஏற்படுகிறது.

என்னுடைய இந்த அபிப்பிராயத்திற்கு உதாரணம் கூறுவதுபோலவே இருந்தது நான் சமீபத்தில் பார்த்த இரு நாடகங்கள். ஒன்று ஸ்ரீ நேதாஜி நாடக சபையார், பைன் ஆர்ட்ஸ் அஸோஸியேஷன் சார்பில் பெரம்பூர் நியூ ஹாலில் சென்ற மாதம் 27-ந் தேதி நடித்த "இரு மனம்" என்ற நாடகம். இன்னொன்றோ, ஸ்ரீ கலா சக்தி நாடக சபையார், மைலை ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் இந்த மாதம் 4, 5-ந் தேதிகளில் நடித்த "கற்பின் சக்தி" என்ற நாடகம் ஆகும்.

அறிவும், ஆற்றலும் உள்ள இடத்தில் லக்ஷ்மி கடாக்ஷம் குறைவாய் இருந்து வருவதை சகஜமாக கவனித்திருக்கிறோம். இந்த இரு சபையாருக்கும் பண வசதி அதிகமில்லை என்பது நன்கு வெளியாயிற்று. ஆனால் அதே சமயத்தில் நல்ல நடிப்புத் திறமையை நான் பார்க்க நேர்ந்தது.

• • •

"இரு மனம்" நல்ல கருத்துக்கள் கொண்ட நாடகந்தான். ஆனால் அது கரடு முரடாக அமைக்கப்பட்டிருந்தது. சில சமயம் நாடக அமைப்பு கதையின் சுவாரஸ்யத்தைக்கூட பாதிப்பதாயிருந்தது.

செல்வபதி என்பவன் தன் தம்பி விஸ்வநாதனைக் கொன்றுவிட்டு, அவனது சொத்தை அபகரித்துக் கொள்ளுகிறான். அவனது தம்பியின் மாப்பிள்ளையான டாக்டர் கைலாஸம், கலியுகம் என்பவனின் துர்போதனையின் விளைவாக பல தீச் செயல்களில் ஈடுபட்டு முடிவில் செல்வபதியைக் கொல்கிறான். செல்வபதியின் சொத்துக்களை அபகரித்துக் கொள்வதற்கு கலியுகம் போட்டியிட்டதால் அவனையும் சுட்டுக் கொல்கிறான் கைலாஸம். இதற்கிடையில் விஸ்வநாதனின் இரு பெண்களும், ஒரு பிள்ளையும் படும் கஷ்டங்கள் நாடகத்தின் சோக பாகத்திற்கு சிகரம் வைக்கிறது.

நாடகப் போக்கு ஸ்பஷ்டமாக இல்லாததால் சில சமயம் குழப்பமும் ஏற்பட்டது. ஸ்திரீ பாத்திரங்கள்

ஸ்ரீ நேதாஜி நாடக சபையாரின் "கிருஷ்ணா லீலா"வில் ருக்மணியாகத் தோன்றிய குமாரி ஜெயலக்ஷ்மி "இரு மனம்" நாடகத்தில் சுகுணாவாக திறமையுடன் நடித்தார்.

வயது முதலிய விஷயங்களில் தாரதம்ரியமின்றி இருந்தனர். இருபது வருஷம் நடந்ததற்கான அறிகுறிகள் சரிவர ஏற்படுத்தப்படவில்லை.

காட்சி ஜோடனைகள், ஆடை அலங்காரம், இவைகளிலெல்லாம் "இல்லாக் குறை" தென்பட்டாலும், பங்கெடுத்துக் கொண்ட நடிக நடிகைகளின் நடிப்பு விஷயத்தில் இக் குறை ஏற்படவில்லை. செல்வபதியாக நடித்த டி. கே. கோவிந்தன், சஞ்சீவியாய் நடித்த டி. கே. கல்யாணம், கலியுகமாக நடித்த வி. எஸ். மூர்த்தி, கைலாஸமாக நடித்த தக்ஷிணமூர்த்தி, சந்திரசேகரனாக நடித்த டி. கே. பாலசந்திரன், பார்வதமாக நடித்த பாண்டியன், சுகுணாவாக நடித்த ஜெயலக்ஷ்மி ஆகியோரின் நடிப்பு அன்றைய நாடகத்தில் மிக சோபித்தது. கணீரென்று பின்னணி சங்கீதம் பாடிய உண்மையில் போற்றுதற்குரியவர்.

ஆர்வம் மிக்க கல்யாணம் கோஷ்டியாருக்கு லக்ஷ்மி கடாக்ஷம் சீக்கிரமே ஏற்பட வேண்டுமென்பதே என் விருப்பம்.

* *

இரண்டாவது நாடகமான 'கற்பின் சக்தி"யின் கதை, துஷ்யந்தனைப் போன்ற ஒரு ராஜாவின் காதல் கதையாகும். ஒரு இளவரசன் காட்டில் அனாதையாயிருந்த ஒரு கட்டழகியை காதலித்து, அழைத்து வந்து ஒரு தாசியின் பாதுகாப்பில் வைக்கிறான். அந்தக் கட்டழகியை தான் அடைவதற்கு சேனாதிபதி சூழ்ச்சி செய்கிறான். அதன் விளைவாக இளவரசன் அவள் மீது சந்தேகம் கொண்டு கர்ப்பிணியான அவளை நிராகரிக்கிறான். குழந்தை பிறந்தபின் அவள் அரசனிடம் முறையிட்டுக் கொள்ளுகிறாள். விசாரணை நடக்கிறது. உண்மை வெளியாகிறது. சேனாதிபதிக்கும் இளவரசனுக்கும் ஏற்பட்ட கத்திச் சண்டையில் சேனாதிபதி மடிகிறான் காதலர்கள் கூடுகின்றனர்.

இந்தக் கதையிலும் சிறு சிறு தொடர்புச் சம்பவங்கள் விடப்பட்டு போனதால் "இதெப்படி சாத்தியம்?" என்று சில கட்டங்களில் கேட்க வேண்டியதாயிருந்தது.

நாடகத்தின் ஆரம்பக் காட்சி சப்பென்றிருந்தது. அந்த 'அனாதைப் பெண்'ணின் பூர்வோத்திரம் கடைசி வரை மர்மமாகவே இருந்தது.

இந்த நாடகத்தில் முக்கியமாககுறிப்பிட வேண்டிய விஷயம் என்னவென்றால், பங்கெடுத்துக் கொண்டவர்களில் அநேகமாக எல்லோரது நடிப்புமே போற்றக் கூடியதாய் அமைந்ததுதான். கதாநாயகியாக நடித்த நடனப் புகழ் டி. கே. பட்டம்மாள் காதல் கட்டத்திலும் சரி; பின்னர் சோக கட்டத்திலும் சரி; தர்பார் காட்சியிலும் சரி; தம் பாகத்தை நன்குணர்ந்து கொண்டு உணர்ச்சி ததும்ப நடித்தார். சம்பாஷணை பேசியதும் தகுந்த குரல் உயர்வு தாழ்வுகளுடன் ஸ்பெஷ்டமாக இருந்தது. அவர் கையில் இருந்ததுமட்டும் உண்மைக் குழந்தையாய் இருந்திருக்கும் பக்ஷத்தில் அதை (தர்பார் காட்சியில்)க் கீழே விட்டு விட்டு அங்கு மிக்கும் நடமாடிக் கொண்டே தன் கட்சியை வாதித்திருக்க முடியும். அப்



"கற்பின் சக்தி"யில் தன் ஹாஸ்ய நடிப்பால் ஒரு கலகலப்பை ஏற்படுத்திய (விசித்திரன்) ஜி. கார்த்திகேயன்.

பொழுது அவரது நடிப்பு மேலும் சோபித்திருக்கும். மொத்தத்தில், அவர் ஒரு சிறந்த நடிகை என்பது இந்த நாடகத்தின் மூலம் சந்தேகமற வெளிப்பட்டது.

இளம் ஹாஸ்ய ஜோடியாகத் தோன்றிய ஜி. கார்த்திகேயன், எஸ். பத்மாக்ஷி ஆகிய இருவரும் சபையோரின் மனதைப் பெரிதும் கவர்ந்து, பன்முறை கரகோஷம் பெற்றனர். அடேயப்பா அந்தப் பெண்ணிடம் என்ன கண் வெட்டு; என்ன ஸ்திரீ சாகஸம்! அந்தப் பையனிடந்தான் என்ன லாவகமான ஹாஸ்ய நடிப்பு!

சினிமா நடிகரான ஊஸ் ஆறுமுகம் மாமாவாகத் தோன்றி சபையோரை மிகக் குதூகலிக்கச் செய்தார். "பெரியவர்கள் சொல்லுவார்கள் 'உண்மைக் கலைஞர்களிடம் அடக்கம் அதிக மிருக்கும்' என்று!" இவ்வளவு சரக்குள்ளவரை சினிமா உலகம் ஏன் அடக்கி வைத்திருக்கிறது என்றுதான் விளங்கவில்லை.

வில்லனாகத் தோன்றிய கே. ஜனார்த்தனம் குரல், பேச்சு, நடிப்பு, நடையுடை பாவனைகள் முதலான யாவற்றிலும் அசல் "பாலய்யா"வாகவே விளங்கினர்.

அரச குமாரனாக நடித்த சோமசுந்தரத்தின் நடிப்பும் நன்று யிருந்தது. அவரும், வில்லனும் போட்ட கத்திச் சண்டை தத்ரூபமாய் இருந்தது. இக்கட்டத்தில் கொலை யுண்ட தாஸி, சண்டை ஆரம்பமானதும் மெதுவாக எழுந்து போயிருக்க வேண்டிய அவசியமில்லை!

தாஸி காஞ்சனாவாக வெகு இயற்கையாய் நடித்தார் ஸ்ரீமதி சௌந்தரவல்லி.

தாஸி வேஷம் சௌந்தர வல்லிக்கு நன்கு பொருந்தியிருந்தது. அதற்கான தளுக்கும், மினுக்கும், பார்வையும், வசீகர முகத்தோற்றமும் இயல்பான நடிப்பும், பேச்சும் அவரிடம் பொருந்தி யிருந்தன.

ஒத்திகை அதிகமில்லை என்பதை அறிவுறுத்தும் சில குறைகள் தென்பட்டன. நடிகர்களில் சிலர் தம் பாடத்தைச் சரிவரப் பேசாமல் தடுமாறினர். முக்கியமாக தர்பார் காட்சியில் அரசன், குருதேவ், மந்திரி இவர்களது பேச்செல்லாம் உளறலாயிருந்தது.

பின்னணி சங்கீதம் சோபிக்கவில்லை. பிளேபேக் முறையும் வெற்றி அளிக்கவில்லை. ஒளி வீச்சு வேலை திருப்தியளிக்கவில்லை. திரையை விடுவதும், வேறு காட்சிகளை அமைப்பதும் துரிதமாய் நடைபெற வேண்டும்.

இதுபோல சில்லரைக் குறைகள் பல இருந்த போதிலும், நடிக நடிகைகள் நன்கு நடித்ததால் நாடகம் கடைசிவரையில் சுவாரஸ்யமா யிருந்தது.

—பி. ஆர். எஸ்.

சிமெண்ட் சப்ளை

சமீபத்தில் பாகிஸ்தானி லிருந்து வந்த சிமெண்ட் சப்ளையின் ஒரு பகுதி சினிமாக் கொட்டகைகள் கட்டுவதற்கும் கொடுக்கப்படுவதாக அசெம்பிளியில் மந்திரி ஸ்ரீ. கோபால் ரெட்டி அறிவித்தார்.

பிரம்மலோகம்

ஔவையார்

கொத்தமங்கலம் சுப்புவின் டைரெக்ஷனில் இப்படம் மளமளவென்று தயாராகி வருகிறது. சுப்பு-சுந்தரிபாய் தோன்றும் சில வெளிப்புறக் காட்சிகள் சமீபத்தில் படம் எடுக்கப்பட்டன.

நாட்டியராணி

புத்துயிர் பெற்றுள்ள "நாட்டியராணி"யின் படப் பிடிப்பு ஜரூராக நடைபெற்று வருகிறது. இந்தப் படத்தில் லலிதா-பத்மினி சகோதரிகளின் நடனமும் சேர்க்கப்படுமாம்.

நவஜீவனம்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிக்சர்ஸின் "நவஜீவனம்" படப்பிடிப்பு அநேகமாக முடிவடைந்து 'எடிட்டிங்' வேலை நடைபெற்று வருகிறது. தமிழ் வருஷப் பிறப்பன்று இப்படத்தை ஜெமினி வெளியிடுமாம்.

மங்கையர்க்கரசி

சீக்கிரமே படப் பிடிப்பு முடிவடைந்து காட்சிக்குத் தயாராகிவிடுமாம் "மங்கையர்க்கரசி" தமிழ்ப் படம். நாகூரின் டைரெக்ஷனில் ஷூட்டிங் மளமளவென்று நடந்து வருகிறது.

134114

ரத்னகுமார்

தமிழ் வருஷப் பிறப்பன்று திரைக்கு வரப் போகும் படங்களுள் முருகன் டாக்கீஸாரின் "ரத்னகுமா"ரும் ஒன்றாக இருக்கும். பி. யு. சின்னப்பா, பானுமதி, மீனலோசனி ஆகியோர் பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தின் ஷூட்டிங் கிருஷ்ணன்-பஞ்சு டைரெக்ஷனில் முடிவடைந்து வருகிறது. முருகன் டாக்கீஸார் ஏராளமான பணச் செலவில் தயாரித்துள்ள பெரிய படம் இது.

தேவமனோஹரி

ஆர்கேஎஸ் பிக்சர்ஸின் "தேவமனோஹரி"யின் படப் பிடிப்பு ஸ்டார் கம்பைன்ஸ், ப்ரகதி ஆகிய இரு ஸ்டுடியோக்களிலும் துரிதமாய் நடைபெற்று வருகிறது. ஏ. டி. கேயின் டைரெக்ஷனில் பானுமதி, ஹொன்னப்ப பாகவதர், காளி ரத்னம் மூவரும் தோன்றும் காட்சிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டன. இப் படத்தின் பாட்டுகளெல்லாம் அநேகமாய் பதிவாகி விட்டன. சரோஜாவுக்காக வஸந்தகுமாரி பாடியிருக்கிறார். காளி என். ரத்னமும் பி. எஸ். சரோஜாவும் குறவன் குறத்தியாகத் தோன்றி ஒரு தமாஷான கதம்பப் பாட்டைப் பாடிக் கொண்டு நாட்டியம் ஆடுகிறார்கள். இப்படத்தில் லலிதா-பத்மினியின் நாட்டியமும் சேர்க்கப்படுமாம்.

ஜீவமணி

விண்ட்ஸர் ப்ரொடக்ஷன்ஸ் "ஜீவமணி"யின் படப் பிடிப்பு ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் நடைபெற்று வருகிறது. ஹொன்னப்ப பாகவதர், டி. ஏ. ஜெயலக்ஷ்மி, என். ஆர். சகுந்தலா, பி. ஆர். சந்திரா முதலியவர்கள் இப்படத்தில் நடிக்கின்றனர்.

லாவண்யா

ஈஸ்டர்ன் ஆர்ட் ப்ரொடக்ஷன்ஸாரின் "லாவண்யா" படத்திற்காக வனஜா-பேபி கமலா நடனக் காட்சி ஒன்று வாஹினி

"நல்ல தம்பி"யில் அக்காவின் மீது அப்பாவுக்கு உள்ள கோபத்துக்கு முட்டுக்கட்டை போடுகிறாள் தங்கை.

ஸ்டுடியோவில் சமீபத்தில் படமாக்கப் பட்டது.

கனகாங்கி

ஸ்டேட் ப்ரொடக்ஷன்ஸின் "கனகாங்கி"யின் படப் பிடிப்பு பம்பாயில் முடிவடைந்து விட்டது. சிக்கிரமே தணிக்கை அதிகாரிகளின் பார்வைக்கு வருமென்று தெரிகிறது

சுவர்ணமாலா

சுவர்ணாம்பிகை பிலிம்ஸாரின் "சுவர்ணமாலா" படத்திற்கான பாட்டுகள் ஒலிப்பதிவாகி வருகின்றன. எம். ஜி. ராமச்சந்திரன், வி. என். ஜானகி, பாலையா, நம்பியார், சந்தானலக்ஷ்மி முதலியவர்கள் நடிக்கின்றனர்.

இன்பவல்லி

சியாமளா பிக்சர்ஸின் "இன்பவல்லி" படத்தில் மஹாலிங்கம் சம்பந்தப் பட்ட காக்ஷிகள் இப்பொழுது சேலம் ரத்னா ஸ்டுடியோவில் படமாகி வருகின்றன.

இதயகீதம்

ஸிடேடல் பிலிம்ஸாரின் "இதயகீதம்" தமிழ்ப் படத்தின் ஷூட்டிங் இம் மாத முடிவிற்குள் நியூடோனில் ஆரம்பமாகி விடுமாம். முக்கியமான காட்சி அமைப்புகளை இவர்கள் தாங்களே தயாரித்துக் கொள்ளுகிறார்களாம். தளியத் டைரெக்ஷனில் தயாராகப்போகும் இப் படத்தின் பாட்டுகளை 'கம்பதாஸனு'ம், வசனங்களை டி. என். ராஜப்பாவும் தயாரித்துள்ளனர். எஸ். வி. வெங்கட்டராமன் சங்கீத டைரெக்ஷனைக் கவனித்து வருகிறார். டி. ஆர். மஹாலிங்கம், டி. ஆர். ராஜகுமாரி, கே. சாரங்கபாணி, பி. ஏ. பெரிய நாயகி, டி. எஸ். ஜெயா, ஸி. வி. நாயகம், பி. எஸ். வீரப்பா, லலிதா-பத்மினி ஆகியோர் இப் படத்தில் நடிப்பார்கள்.

விஜயகுமாரி

ஜூபிடரின் "விஜயகுமாரி"யில் ஏற்கனவே உள்ள நடிகர்களுடன் கூட சிறுகளத்தூர் சாமாவும் நடிக்க ஒப்பந்தம் செய்யப் பட்டிருப்பதாய்த் தெரிகிறது.

கிருஷ்ண விஜயம்

ஜூபிடரின் "கிருஷ்ண விஜயமும்" சுந்தர்ராவ் நட்கர்ணியின் டைரெக்ஷனில் வளர்ந்து வருகிறது. இப் படத்தில் அக்ரூரராக ஸி. வி. வி. பந்துலு நடித்து வருகிறார்.

நம் நாடு

பிரபல டைரெக்டர் வி. சாந்தாராமின், "நம் நாடு" ஹிந்திப் படத்தில் தமிழ் சம்பாஷணைகளும் பாட்டுகளும் சேர்க்கப்பட்டு தயாராகி வருகிறது. இம் மாத இறுதியில் காட்சிக்குத் தயாராகி விடுமாம் இப் படம்.

புல்புலேயான்

மினர்வா பிக்சர்ஸாரின் இப் படத்தில் டி. ஆர். மஹாலிங்கம், பானுமதி, எம். கே. மீனலோசனி, கே. சாரங்கபாணி முதலியோர் நடிக்கப் போவதாகத் தெரிகிறது. பாட்டுகள் பதிவு செய்யும் வேலை சிக்கிரம் ஆரம்பமாகுமாம்

லைலா மஜ்னு

பாலாஜி பிக்சர்ஸாரின் "லைலா மஜ்னு" தமிழ்ப் படத்தின் ஷூட்டிங் எப். நாகூரின் டைரெக்ஷனில் நியூடோன் ஸ்டுடியோவில் துரிதமாய் நடைபெற்று வருகிறது. இப் படத்தின் பாட்டுகளை 'கம்பதாஸனு'ம், லக்ஷ்மணதாஸும் இயற்றியுள்ளனர். பிரபல எஸ். வி. வெங்கட்டராமன் சங்கீத டைரெக்ஷனைக் கவனித்து வருகிறார். "ஞானசௌந்தரி"யில் புகழ் பெற்ற ஜோடியான மஹாலிங்கம்—ராஜம்மா இப் படத்தில் மீண்டும் சேர்ந்து நடிக்கின்றனர். மற்றும் கிருஷ்ணன், மதுரம், சகஸ்ரநாமம், ஆர். பாலசுப்ரமண்யம், கே. பி. காமாட்சி, பி. எஸ். சிவபாக்யம், லலிதா-பத்மினி ஆகியோரும் நடிக்கின்றனர்.

பரிசு பெறுங்கள்

உங்களுக்கு அவ்வப்போது தோன்றும்

சினிமா, நாடகம், சங்கீதம் சம்பந்தமான

ஹாஸ்யத் துணுக்குகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். பிரசுரிக்கப்படும் ஒவ்வொரு துணுக்கிற்கும் ரூ. 3 பரிசளிக்கப்படும். துணுக்குடன் சித்திரமும் வரைந்து அனுப்பலாம்.

—ஆசிரியர்.